بسم اللہ الرحمن الرحیم نحمدہ ونصلی علیٰ رسولہ الکریم وعلیٰ عبدہ المسیح الموعود
وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّأَنْتُمْ أَذِلَّةٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian TAMIL

தொகுதி 6

இதழ் 16

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

ஆசிரியர் முஸஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

09 ரமலான் 1442 ஹிஜ்ரி கமரி 22 ஷஹாதத் 1400 ஹிஜ்ரி ஷம்ஸி தப்லீக் 22 ஏப்ரல் 2021

**அல்லாஹ்வின் கட்டளை**

يَاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْٓا اَوْفُوْا بِالْعُقُوْدِ

நம்பிக்கையாளர்களே (நீங்கள்) உடன்படிக்கைகளை நிறைவேற்றுங்கள். (5:2)

يَاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا لَا تُحِلُّوْا شَعَآئِرَ اللّٰهِ

நம்பிக்கையாளர்களே! அல்லாஹ்வினால் புனிதமாக்கப்பட்ட அடையாளங்களை நீங்கள் இழிவுபடுத்தாதீர்கள். (5:2)

**அஹ்மதிய்யா செய்திகள்**

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய –தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி –யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

## எனது ஜமாஅத் உண்மையான இறையச்சத்தையும், தூய்மையையும் மேற்கொள்வதற்கு நான் என்ன செய்வேன் என்பதை எண்ணி எனது உள்ளத்தில் மிகுந்த வேதனை ஏற்படுகின்றது

**வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...**

நன்றாக நினைவிற் கொள்ளுங்கள். இறைவன் தனது அடியாரை ஒருபோதும் வீணாக்க மாட்டான். எந்த நோக்கத்திற்காக அவர் வந்துள்ளாரோ அதனை அவரது கரங்களின் மூலமாக முழுமை செய்யாத வரை ஒருபோதும் அவரை (அல்லாஹ்) மரணிக்கச் செய்ய மாட்டான். எவருடைய பகைமையும், எவருடைய தீய துஆவும் அவருக்கு எந்தத் தீங்கையும் இழைக்க முடியாது. இந்த அமைப்பினுடைய அழிவு மிக அருகில் உள்ளது என்று நமது எதிரி (முன்ஷி இலாஹி பக்ஷ் – அஸாயே மூஸா எனும் நூலின் ஆசிரியர்) கூறியதாக ஒருவர் கூறினார். அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:

كَبُرَتْ كَلِمَةً تَخْرُجُ مِنْ اَفْوَاهِهِمْ اِنْ يَّقُوْلُوْنَ اِلَّا كَذِبًا பொருள்: அவர்களின் வாய்களிலிருந்து வெளிவரும் இச்சொல் மிகவும் அபாயகரமான கூற்றாகும். அவர்கள் பொய்யையே கூறுகின்றனர். **(18:6)**

பின்னர் வேதனையுடன் அன்னார் கூறினார்கள்: நேற்று **(22 ஜூன் 1899)** பல முறை இறைவன் புறமிருந்து இந்த இல்ஹாம் இறங்கியது. நீங்கள் இறையச்சமுடையவர்களாகி விடுங்கள். இறையச்சத்தின் நுட்பமான வழியில் செல்லுங்கள். அவ்வாறு செய்தால் இறைவன் உங்களுக்கு உதவி செய்வான். இதனால் எனது உள்ளத்தில் மிகப்பெரும் வேதனை ஏற்பட்டது. அதாவது எனது **எனது ஜமாஅத் உண்மையான இறையச்சத்தையும், தூய்மையையும் மேற்கொள்வதற்கு நான் என்ன செய்வேன் என்ற கவலை ஏற்பட்டது. நான்** எந்த அளவுக்கு துஆ செய்கிறேன் என்றால், துஆ செய்து செய்து பலகீனம் மேலோங்கி விடுகிறது. சில நேரம் மயக்கம் ஏற்பட்டு மரணம் வரை நிலைமை சென்றடைந்து விடுகின்றது. இறைனுடைய பார்வையில் இறையச்சமுடையவர்களாக ஆகி விடாத வரை எந்தவொரு ஜமாஅத்தும் இறைவனுடைய உதவியை பெற முடியாது.

தக்வாவின் சுருக்கம் இதுவாகும். அதாவது அனைத்து புனித வேதங்கள், தவ்ராத், இஞ்ஜீல் ஆகியவற்றின் போதனைகளின் சுருக்கம் இறையச்சமாகும். திருக்குர்ஆன் ஒரே சொல்லில் இறைவனுடைய மகத்துவமிக்க விருப்பம் மற்றும் முழுமையான திருப்தியை வெளிப்படுத்தியுள்ளது. நான் இந்த கவலையிலும் இருக்கின்றேன். அதாவது நான் எனது ஜமாஅத்தில் இறையச்சமுடையவர்களையும், உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்கக் கூடியவர்களையும், இறைவனுடன் முழுமையான தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளக் கூடியவர்களையும் தனியாக பிரிக்க விரும்புகின்றேன். சில மார்க்க பணிகளை அவர்களிடம் ஒப்படைக்க விரும்புகின்றேன். பின்னர் உலகத்தின் துன்பங்களிலும், கவலைகளிலும் மூழ்கியிருப்பவர்களையும், இரவு பகலாக உலகின் மரணித்தவற்றை தேடுவதில் தனது உயிரை மாய்த்துக் கொள்பவர்களையும் எவ்வகையிலும் நான் பொருட்படுத்த மாட்டேன்.

ஐயோ! தற்போது இறைவனைத் தவிர்த்து எமக்கு யாரும் இல்லை. இரவும் பகலும் நமக்கு துன்பங்களை ஏற்படுத்துகின்ற கவலையில் பலர் அமர்ந்திருக்கின்றனர். இறைவன் நமக்கு உதவி செய்யவில்லை என்றால் நமது தங்குமிடம் எங்கே?

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 276 – 2018 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

## நபிமொழி

ஹஸ்ரத் ஜாபிர் பின் அப்தில்லாஹ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தனது ஒரு பணிக்காக என்னை அனுப்பினார்கள். நான் சென்றேன். பின்னர் நான் அந்தப் பணியை முழுமை செய்து விட்டு திரும்பினேன். நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் வந்தேன். மேலும் அன்னாருக்கு ஸலாம் கூறினேன். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எனக்கு பதிலளிக்கவில்லை. எனது உள்ளத்தில் தோன்றிய எண்ணத்தை அல்லாஹ்வே நன்கறிந்திருக்கின்றான். ஒருவேளை நான் காலதாமதம் செய்து விட்டதால் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், என் மீது அதிருப்தியில் இருக்கின்றார்கள் என்று நான் கருதினேன். பின்னர் நான் மீண்டும் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு ஸலாம் கூறினேன். அப்போது பெருமானார் (ஸல்) அவர்கள் எனக்கு பதிலளிக்கவில்லை. அப்போது எனது உள்ளத்தில் முன்பை விட அதிகமாக வேதனை ஏற்பட்டது. பின்னர் நான் மீண்டும் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு ஸலாம் கூறினேன். அப்போது பெருமானார் (ஸல்) அவர்கள் எனக்கு பதில் அளித்தார்கள். மேலும் நான் தொழுது கொண்டிருந்தேன். தொழுகை உங்களுக்கு பதிலளிப்பதிலிருந்து என்னை தடுத்திருந்தது என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(சஹீஹ் புகாரி தொகுதி – 2006 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

## ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகத்துவமிக்க கலீஃபா மற்றும் துன் நூரைன் ஹஸ்ரத் உஸ்மான் பின் அஃபான் (ரலி) அவர்களின் போற்றுதலுக்குரிய பண்புகளின் நற்குறிப்புகள்

ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 19 மார்ச் 2021** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1400 -ஆம் ஆண்டு **அமான்** மாதம் **19 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ

أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ- الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ- إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ- صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

اَلَّذِيْنَ يُنْفِقُوْنَ أَمْوَالَهُمْ بِاللَّيْلِ وَالنَّهَارِ سِرًّا وَّعَلَانِيَةً فَلَهُمْ أَجْرُهُمْ عِنْدَ رَبِّهِمْ وَلَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُوْنَ

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு எடுத்துக் கூறப்பட்டு வருகின்றது. அன்னாரின் ஷஹாதத்திற்குப் பிறகு நடைபெற்ற சம்பவங்களை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களும் எழுதியுள்ளார்கள். ஷஹாதத்திற்குப் பிறகுள்ள நாட்களைப் பற்றி சற்று சுருக்கமான எழுத்துக்கள் உள்ளன. அன்னார் இவ்வாறு எழுதுகின்றார்கள்:

தற்போது மதீனா அந்த மக்களின் கட்டுப்பாட்டிற்குள் வந்து விட்டது. அந்த நாட்களில் அவர்கள் செய்த செயல்கள் மிகவும் வியப்பிற்குரியதாக இருந்தன. ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களை ஷஹீதாக்கி இருந்தார்கள். ஆயினும் அன்னாரின் உடலை அடக்கம் செய்வதிலும் கூட ஆட்சேபனை செய்யப்பட்டது. மூன்று நாட்கள் வரை அன்னாரை அடக்கம் செய்ய முடியாமல் போனது. இறுதியில் சஹாபிகளின் ஒரு கூட்டம் தைரியத்துடன் இரவு நேரத்தில் அன்னாரை நல்லடக்கம் செய்தது. அவர்களின் வழிப்பாதைகளிலும் அந்த மக்கள் தடைகளை ஏற்படுத்தி இருந்தார்கள். ஆயினும் சில மக்கள் கடுமையாக எதிர்ப்போம் என்று மிரட்டல் விடுத்தனர். எனவே அவர்கள் அடங்கி விட்டனர்.

(இஸ்லாம் மே இக்திலாஃபாத் கா ஆகாஸ், அன்வாருல் உலூம் தொகுதி 4 பக்கம் 333)

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களைப் பற்றி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முன்னறிவிப்பு செய்திருந்தார்கள். அதன் குறிப்பு இவ்வாறு கிடைக்கின்றது. ஹஸ்ரத் அபூ மூஸா அஷ்அரி அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு தோட்டத்தில் நுழைந்தார்கள். மேலும் தோட்டத்தின் வாசலில் காவல் காப்பதற்கு எனக்கு கட்டளையிட்டார்கள். இதற்கிடையில் ஒருவர் வந்தார். உள்ளே வருவதற்கு அனுமதி வேண்டினார். அவரை உள்ளே அனுமதியுங்கள். அவருக்கு சொர்க்கத்திற்கான நற்செய்தியை வழங்குங்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அந்த நபர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களாக இருந்ததை நான் கண்டேன். பின்னர் இன்னொரு நபர் வந்தார். அவர் அனுமதி வேண்டியபோது, அவரை உள்ளே அனுமதியுங்கள். அவருக்கு சொர்க்கத்திற்கான நற்செய்தியை கூறுங்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அந்த நபர் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களாக இருந்ததை நான் கண்டேன்.

பின்னர் மற்றுமொரு நபர் வந்தார். அனுமதி வேண்டினார். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சற்று நேரம் வரை மௌனமாக இருந்தார்கள். அதன் பிறகு அவரை உள்ளே வர அனுமதியுங்கள். அவருக்கு சொர்க்கத்திற்கான நற்செய்தியை கூறுங்கள். எனினும் அவருக்கு ஒரு மாபெரும் துன்பம் வந்தடையும் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அந்த நபர் ஹஸ்ரத் உஸ்மான் பின் அஃபான் (ரலி) அவர்களாக இருந்தார்கள் என்பதை நான் கண்டேன்.

(சஹீஹுல் புகாரி, கிதாபுல் ஃபஸாயிலுன் நபி (ஸல்), பாப் மனாகிப் உஸ்மான் பின் அஃபான், ஹதீஸ் எண் 3695)

ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உஹது மலையின் மீது ஏறினார்கள். அப்போது அன்னாருடன் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி), ஹஸ்ரத் உமர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) ஆகியோரும் இருந்தனர். உஹது மலை அசையத் தொடங்கியது. அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உஹது மலையே நீ அமைதியாக இரு என்று கூறினார்கள்.

அறிவிப்பாளர் கூறுகின்றார்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அப்போது அதன் மீது தனது பாதங்களைக் கொண்டு தட்டினார்கள் என்று நான் கருதுகிறேன். மேலும் உன்மீது ஒரு நபியும், ஒரு சித்தீக்கும், இரண்டு ஷஹீதுகளும் இருக்கின்றார்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(சஹீஹுல் புகாரி, கிதாபுல் ஃபஸாயிலுன் நபி (ஸல்), பாப் மனாகிப் உஸ்மான் பின் அஃபான், ஹதீஸ் எண் 3699)

ஹஸ்ரத் இப்னு உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு குழப்பத்தைக் குறித்து எடுத்துரைத்தவாறு இவ்வாறு கூறினார்கள்: இந்த நபர் அந்த குழப்பத்தின் நிலையில் அநீதியிழைக்கப்பட்ட சூழலில் கொல்லப்படுவார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களைக் குறித்து சைகை செய்தவாறு இதனைக் கூறினார்கள்.

(சுனன் திர்மிதி, அப்வாபுல் மனாகிப்... ஹதீஸ் எண் 3708)

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் விட்டுச் சென்ற சொத்துக்களைப் பற்றி இவ்வாறு குறிப்பு கிடைக்கின்றது. உபைதுல்லாஹ் பின் உத்பா அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் ஷஹீதாக்கப்பட்ட நாளன்று அன்னாரின் கருவூல காப்பாளரிடம் அன்னாருடைய மூன்று கோடியே ஐந்து லட்சம் திர்ஹம்களும், இரண்டரை லட்சம் தீனார்களும் இருந்தன. அவை அனைத்தும் கொள்ளையடிக்கப்பட்டன. மேலும் அன்னார் ரப்ஸா என்ற இடத்தில் ஓராயிரம் ஒட்டகங்களை விட்டிருந்தார்கள். ரப்ஸா என்பது ஹிஜாஸ் செல்லும் வழிப்பாதையில் மதீனாவிலிருந்து மூன்று நாட்கள் பயணத் தொலைவில் அமைந்துள்ள ஓர் ஊராகும். இதேபோன்று பராதேஸ், கைபர், வாதியுல் குரா ஆகிய இடங்களில் இரண்டு லட்சம் தீனார்களை அன்னார் தான தருமமாக வைத்திருந்தார்கள். அதிலிருந்து அன்னார் தான தர்மங்கள் செய்து வந்தார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 42 உஸ்மான் பின் அஃபான்– 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தார் அஹ்யாவுத் தராஸில் அச்சிடப்பட்டது)

இதற்கு முன்பும் இந்த குறிப்பு எடுத்துக் கூறப்பட்டது. அதாவது அன்னார் கூறினார்கள்: நான் செல்வந்தராக இருந்தேன். இப்போது என்னிடம் வெறும் இரண்டு ஒட்டகங்கள் மட்டுமே உள்ளன. அதனை நான் ஹஜ் செய்வதற்காகவே வைத்துள்ளேன்.

(இஸ்லாம் மே இக்திலாஃபாத் கா ஆகாஸ், அன்வாருல் உலூம் தொகுதி 4 பக்கம் 294)

தற்போது கூறப்படுகின்ற விஷயம் சமுதாயக் கருவூலம் பெரிய அளவிற்கு வளர்ந்த நேரத்தைக் குறித்ததாகக் கூட இருக்கலாம். அதனை அறிவிப்பாளர் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் இருப்புடன் ஒப்பிட்டுக் கூறியிருக்கலாம். அல்லது ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களைப் பற்றியே கூறியிருக்கலாம். அந்நிலையில் அவர்கள் தமக்காக எதுவும் செலவு செய்யாதவர்களாக இருந்திருப்பார்கள். தான தர்மங்கள் மற்றும் சமுதாய

தேவைகளுக்காக மட்டுமே அன்னார் செலவு செய்து வந்திருக்கலாம். எவ்வாறிருப்பினும் நான் ஓர் அறிவிப்பையே எடுத்துரைத்துள்ளேன். இதற்கு முன்பு அன்னாரின் சொந்த கூற்று ஒன்றையும் அறிவிப்பின் வடிவில் நான் எடுத்துரைத்துள்ளேன். கருவூலங்களை பாதுகாப்பதற்காக நியமிக்கப்பட்டிருந்த நபர்களிடமிருந்தும் நமக்கு தெரிய வருவது என்னவென்றால் அது சமுதாய கருவூலமாகவே இருந்தது. அதனை பாதுகாப்பதற்காகவே அன்னார் சிலரை நியமித்திருந்தார்கள்.

**(இஸ்லாம் மே இக்திலாஃபாத் கா ஆகாஸ், அன்வாருல் உலூம் தொகுதி 4 பக்கம் 329)**

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் ஷஹாதத் சம்பவங்களைப் பற்றி சஹாபிகள் கூறுகின்ற விஷயங்கள் இவ்வாறாகும். ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களிடம் தாங்கள் எங்களுக்கு ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களைப் பற்றி சிறிது கூறுங்கள் என்று கேட்கப்பட்டது. அந்த நபர் எப்படிப்பட்டவராக இருந்தார் என்றால் அவர் வானவர்களுக்கு மத்தியிலும் துன் நூரைன் என்று அழைக்கப்பட்டு வந்தார் என்று அன்னார் கூறினார்கள்.

**(அல் அஸாபா ஃபீ தமீஸுஸ் சஹாபா தொகுதி 4 பக்கம் 378 உஸ்மான் பின் அஃபான் – 2005 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)**

அவர் அல்லாஹ்வின் பார்வையிலும் இரண்டு ஒளிகளை உடையவராக இருந்தார்.

ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் தொடர்ந்து இவ்வாறு கூறினார்கள்: நம் அனைவரை விடவும் மிகவும் கருணை காட்டக்கூடியவராக ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் திகழ்ந்தார்கள்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களுக்கு ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் ஷஹாதத் பற்றிய செய்தி கிடைத்தபோது அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: இந்த கயவர்கள் அன்னாரை கொலை செய்து விட்டனர். ஆனால் மக்களில் எல்லாரையும் விட மிக அதிகமாக கருணை காட்டக் கூடியவராகவும், மிக அதிகமாக தனது இறைவன் மீதான அச்சத்தை மேற்கொண்டவராகவும் அன்னார் இருந்தார்கள்.

**(அல் அஸாபா ஃபீ தமீஸுஸ் சஹாபா தொகுதி 4 பக்கம் 378 உஸ்மான் பின் அஃபான் – 2005 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)**

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தனது மருமகன்களுக்காக இவ்வாறு துஆ செய்துள்ளார்கள். அதனுடைய ஓர் அறிவிப்பு இவ்வாறு நமக்கு கிடைக்கின்றது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: நான் கண்ணியமும், கம்பீரமுமிக்க எனது இறைவனிடத்தில் இவ்வாறு துஆ செய்தேன். அதாவது இறைவா! நீ எனது மருமகன்களில் எவரையும் மேலும் நான் யாருக்கு மருமகனாக இருப்போனோ அவரையும் நெருப்பில் நுழையச் செய்யாமல் இருப்பாயாக.

**(அல்இஸ்திஆப் ஃபீ மஃரூஃபத்தில் அஸ்ஹாப் தொகுதி 3 பக்கம் 156 உஸ்மான் பின் அஃபான் – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)**

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் ஆடை மற்றும் உடல் அமைப்பு பற்றி கூறப்படுகிறது. மஹ்மூத் பின் உபைத் அவர்கள் இவ்வாறு அறிவிக்கின்றார்கள். அன்னார் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களை ஒரு கழுதையின் மீது அமர்ந்து இந்த நிலையில் சென்றதைக் கண்டார்கள். அதாவது அப்போது அன்னாரின் உடலில் இரண்டு சிவப்பு போர்வைகளே இருந்தன.

ஹகம் பின் சலத் அவர்கள் அறிவிக்கின்றார். எனது தந்தையார் என்னிடம் இவ்வாறு கூறினார்கள்: அன்னார் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களை சொற்பொழிவாற்றியவாறு கண்டார்கள். அப்போது அன்னாரின் மீது கருப்பு நிற போர்வை இருந்தது. அன்னார் மருதாணி சாயம் பூசியிருந்தார்கள்.

சலீம் அபூ ஆமிர் அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் உஸ்மான் பின் அஃபான் அவர்கள் மீது ஒரு யமனி போர்வை இருப்பதைக் அன்னார் கண்டார்கள். அதன் விலை 100 திர்ஹமாக இருந்தது.

முஹம்மத் பின் உமர் அவர்கள் அறிவிக்கின்றார்கள். நான் அம்ர் பின் அப்தில்லாஹ் உர்வா பின் காலித் மற்றும் அப்துர் ரஹ்மான் பின் அபூ ஸனாத் ஆகியோரிடம் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் உடல் அமைப்பைப் பற்றி கேட்டேன். அவர்கள் அனைவரும் எந்த கருத்து வேறுபாடுமின்றி இவ்வாறு பதிலளித்தார்கள். அதாவது ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் குள்ளமானவராகவும் இருக்கவில்லை; மிக உயரமானவராகவும் இருக்கவில்லை. அன்னாரின் முகம் மிகவும் அழகானதாகவும், தோல் மென்மையானதாகவும், தாடி அடர்த்தியானதாகவும், கோதுமை நிறம் உடையவராகவும், அகன்ற தோள்பட்டை கொண்டவராகவும், தலைமுடி அடர்த்தியானதாகவும் இருந்தது. அன்னார் மருதாணியால் தாடிக்கு சாயமிட்டு வந்தார்கள்.

வாகித் பின் அபூ யாஸர் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் தமது பற்களை தங்க இழைகளால் கட்டியிருந்தார்கள்.

மூஸா பின் தல்ஹா அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் ஜுமுஆ தொழுகை நாளன்று வெளியில் வருகை தரும்போது அன்னார் மீது இரண்டு சிவப்பு போர்வைகள் இருப்பதை நான் கண்டுள்ளேன். பின்னர் அன்னார் மேடையில் அமர்வார்கள். மேலும் முஅஸ்ஸன் பாங்கு கொடுப்பார். பின்னர் முஅஸ்ஸன் அமைதியாகி விட்ட பிறகு ஒரு வளைந்த தடி ஒன்றின் உதவியுடன் அன்னார் எழுந்து நிற்பார்கள். கைகளில் தடியை பிடித்தவாறு குத்பா கொடுப்பார்கள். பின்னர் அன்னார் மேடையில் இருந்து இறங்கியதும் முஅஸ்ஸன் இகாமத் கூறுவார்.

ஹஸன் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் பள்ளிவாசலில் தனது போர்வையை தலையனையாக ஆக்கி உறங்குவதை நான் கண்டுள்ளேன்.

**(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 32–34 உஸ்மான் பின் அஃபான்– 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தார் அஹ்யாவுத் தராஸில் அச்சிடப்பட்டது)**

மூஸா பின் தல்ஹா அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஜுமுஆ நாளன்று ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் ஒரு தடி ஒன்றை ஊன்றுகோலாக வைத்திருந்தார்கள். அன்னார் அனைத்து மக்களை விடவும் மிக அழகாக இருந்தார்கள். அன்னார் மீது இரண்டு சிவப்பு நிற ஆடைகள் இருந்தன. ஒன்று, போர்வையாகும். மற்றொன்று கீழாடையாகவும் இருந்தது. எந்த அளவுக்கு என்றால் அன்னார் மேடையில் இருந்து கீழே இறங்கி அங்கு அன்னார் அமர்ந்து கொண்டார்கள்.

**(சஹீஹுல் புகாரி, கிதாபுல் லிபாஸ்... ஹதீஸ் எண் 5875)**

அன்னாரிடம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மோதிரம் ஒன்று இருந்தது. அதில் முஹம்மது ரஸூலுல்லாஹ் என்று எழுதப்பட்டிருந்தது. அதனை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பயன்படுத்தி வந்திருந்தார்கள்.

இது பற்றி அறிவிப்பில் இவ்வாறு வருகிறது. ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ரோமானிய பேரரசருக்கு கடிதம் எழுதுவதற்கு எண்ணம் கொண்டபோது அன்னாரிடம் இவ்வாறு கூறப்பட்டது. இந்த கடிதத்தில் எந்த முத்திரையும் பதிக்காமல் அவர்கள் உங்களது கடிதத்தை படிக்க மாட்டார்கள். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வெள்ளியிலான ஒரு மோதிரம் ஒன்றை தயார் செய்தார்கள். அதில் முஹம்மது ரஸூலுல்லாஹ் என்ற எழுத்துக்கள் இருந்தன.

அறிவிப்பாளர் கூறுகின்றார்: அப்போது தான் நான் மோதிரத்தின் வெண்மையை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கரங்களில் காண்பது போன்று இருந்தது. மேலும் அந்த விஷயம் எனக்கு புத்தம் புதியதாக இருந்தது.

ஹஸ்ரத் அனஸ் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மோதிரம் அன்னாரின் கரத்திலேயே இருந்தது. அன்னாரின் மரணத்திற்குப் பிறகு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கரங்களில் இருந்தது. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் காலத்திற்குப் பிறகு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கரங்களில் இருந்தது. அதன் பிறகு ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் காலகட்டம் வந்தது. அப்போது ஒரு முறை அன்னார் உரைஸ் என்ற பெயருடைய கிணற்றில் அமர்ந்திருந்தார்கள்.

அறிவிப்பாளர் கூறுகின்றார்: அன்னார் அந்த மோதிரத்தை எடுத்தார்கள். அதைக் கொண்டு விளையாட ஆரம்பித்தார்கள். அது விழுந்து விட்டது. அதாவது அன்னார் அதனை விரல்களிலிருந்து கழற்றி வெளியே எடுத்து மீண்டும் போட்டுக் கொண்டிருந்தார்கள். அப்போது அது கீழே விழுந்து விட்டது.

அறிவிப்பாளர் கூறுகின்றார்: நாங்கள் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுடன் இணைந்து மூன்று நாட்கள் வரை அதை தேடினோம். கிணற்றிலிருந்து அனைத்து தண்ணீரையும் வெளியேற்றினோம். ஆயினும் அந்த மோதிரம் கிடைக்கவில்லை. அந்த மோதிரம் தொலைந்த பிறகு ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள், முரசு கொட்டி தொலைந்த மோதிரத்தை திருப்பி கொண்டு வருபவருக்கு ஒரு பெரும் செல்வம் கொடுக்கப்படும் என்று அறிவித்தார்கள். அந்த மோதிரம் தொலைந்து போனதால் அன்னாருக்கு மிகுந்த வேதனை ஏற்பட்டிருந்தது. அந்த மோதிரம் திருப்பி கிடைக்கும் என்ற நம்பிக்கையை அன்னார் இழந்த பிறகு அன்னார் வெள்ளியிலான மோதிரம் ஒன்றை தயார் செய்ய கட்டளையிட்டார்கள்.

எனவே முற்றிலும் அதேபோன்று ஒரு மோதிரம் தயார் செய்யப்பட்டது. அதில் முஹம்மது ரஸூலுல்லாஹ் என்று எழுத்துக்களும் பொறிக்கப்பட்டிருந்தன. அந்த மோதிரத்தை அன்னார் தனது மரணம் வரை அணிந்திருந்தார்கள். அன்னாரின் ஷஹாதத் சம்பவத்தின் போது யாரோ ஒரு அடையாளம் தெரியாத நபர் அதை எடுத்துக் கொண்டு சென்று விட்டான்.

(சஹீஹுல் புகாரி, கிதாபுல் லிபாஸ்... ஹதீஸ் எண் 5879)

அஷ்ர முபஷ்ஷரா அதாவது வாழ்நாளிலேயே சொர்க்கத்திற்குரிய நற்செய்தி பெற்ற பத்து நபர்களில் ஒருவராக அன்னார் இருந்தார்கள். ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அக்னஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: அன்னார் பள்ளிவாசலில் இருந்தார்கள். அப்போது ஒரு நபர் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களிடம் மரியாதைக் குறைவாக பேசினார். அப்போது ஹஸ்ரத் சயீத் பின் ஸைது அவர்கள் எழுந்து நின்றார்கள். மேலும் நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பற்றி சாட்சியம் வழங்குகின்றேன். நிச்சயமாக நான் அன்னார் இவ்வாறு கூறியதைக் கேட்டேன். பத்து நபர்கள் சொர்க்கத்திற்கு செல்வார்கள் என்று அன்னார் கூறினார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சொர்க்கத்தில் இருப்பார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் சொர்க்கத்தில் இருப்பார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களும் சொர்க்கத்தில் இருப்பார்கள். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களும் சொர்க்கத்தில் இருப்பார்கள். ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களும் சொர்க்கத்தில் இருப்பார்கள். ஹஸ்ரத் தல்ஹா (ரலி) அவர்களும், ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்களும், ஹஸ்ரத் ஸுபைர் பின் அவாம் (ரலி) அவர்களும், ஹஸ்ரத் சஅத் பின் மாலிக் (ரலி) அவர்களும் சொர்க்கத்தில் இருப்பார்கள். நான் நாடினால் அவர்களில் பத்தாவது நபரின் பெயரையும் குறிப்பிட முடியும்.

அறிவிப்பாளர் கூறுகின்றார்: பத்தாவது நபர் யார் என்று மக்களில் சிலர் கேட்டனர். அதற்கு ஹஸ்ரத் சயீத் பின் ஸைது (ரலி) அவர்கள் சிறிது நேரம் வரை மௌனமாக இருந்தார்கள். அப்போது மக்கள் பத்தாவது நபர் யார் என்று மீண்டும் கேட்டனர். அதற்கு அன்னார் சயீத் பின் ஸைது அதாவது நான் ஆவேன் என்று கூறினார்கள்.

(சுனன் அபீ தாவூது.... ஹதீஸ் எண் 4649)

இதற்கு முன்பும் இதை நான் குறிப்பிட்டுள்ளேன். இந்த இடத்தில் இந்த அறிவிப்பு பொருத்தமானதாகும்.

சொர்க்கத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுடன் நெருக்கமாக இருப்பது தொடர்பாக அறிவிப்பு கிடைக்கின்றது. ஹஸ்ரத் தல்ஹா பின் உபைதில்லாஹ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: ஒவ்வொரு நபிக்கும் ஒரு தோழர் இருக்கின்றார். எனது தோழர் (அதாவது சொர்க்கத்தில் எனது தோழராக) ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் இருப்பார்கள்.

(சுனன் திர்மிதி, அப்வாபுல் மனாகிப்.... ஹதீஸ் எண் 3698)

ஹஸ்ரத் ஜாபிர் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஒரு முறை நாங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் ஒரு வீட்டில் முஹாஜிரீன்களின் ஒரு கூட்டத்தினருடன் அமர்ந்திருந்தோம். அதில் அபூபக்ர், உமர், உஸ்மான், அலி, தல்ஹா, ஸுபைர், அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் மற்றும் சஅத் பின் அபீ வக்காஸ் ஆகியோர் இருந்தனர். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஒவ்வொரு நபரும் தமக்கு இணையான நபருடன் எழுந்து நில்லுங்கள் என்று கூறினார்கள். பின்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுடன் எழுந்து நின்று விட்டார்கள். மேலும் அவர்களை சந்தித்தார்கள்.

பின்னர் اَنْتَ وَلِيِّيْ فِي الدُّنْيَا وَوَلِيِّيْ فِي الْاٰخِرَةِ (அதாவது நீங்கள் இவ்வுலகிலும் மறுமையிலும் எனது நண்பர் ஆவீர்கள்) என்று கூறினார்கள்.

(மஜ்மவுஸ் ஸவாஹித்... பக்கம் 66 கிதாப் அல்மனாகிப் ஹதீஃஸ எண் 14528 – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களால் விடுதலை செய்யப்பட்ட அடிமையான அபூ சஹ்லா அவர்கள் அறிவிக்கின்றார்கள். யவ்முத் தார் அன்று (அதாவது ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களை கிளர்ச்சியாளர்கள் அன்னாரது வீட்டை முற்றுகையிட்டு அன்னாரை ஷஹீதாக்கிய நாள் யவ்முத் தார் என்று அழைக்கப்படுகிறது) நான் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களிடம் கூறினேன். அமீருல் மூமினீன் அவர்களே! இந்த குழப்பவாதிகளுக்கு எதிராக போரிடுங்கள். ஹஸ்ரத் அப்துல்லாஹ் அவர்களும், அமீருல் மூமினீன் அவர்களே! இந்த குழப்பவாதிகளுக்கு எதிராக போரிடுங்கள் என்று கூறினார்கள். அதற்கு ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள், அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் போர் புரிய மாட்டேன் என்று கூறினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் என்னிடம் வாக்குறுதி ஒன்றை வாங்கியுள்ளார்கள். அதை முழுமை செய்ய வேண்டும் என நான் விரும்புகிறேன் என்றும் கூறினார்கள்.

(அஸதுல் காபா ஃபீ மஃரூஃபத்திஸ் சஹாபா லி இப்னி அஸீர் தொகுதி 3 பக்கம் 483,484 உஸ்மான் பின் அஃபான்– 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் பதர் போரில் பங்கு பெறாமல் பின் தங்கியது குறித்தும், உஹது போர் மைதானத்திலிருந்து வெளியேறியது குறித்தும், பைத்துர் ரிஸ்வானில் பங்கு பெறாதது குறித்தும் ஆட்சேபனை செய்யப்படுகிறது. இந்த நயவஞ்சகர்கள் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள்மீது இவ்வாறெல்லாம் ஆட்சேபனை செய்து கொண்டிருந்தார்கள். உஸ்மான் பின் மவ்ஹப் அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

எகிப்து வாசிகளில் ஒருவன் ஹஜ் செய்வதற்காக வந்தான். சில மக்கள் அமர்ந்திருப்பதை அவன் கண்டான். குழப்பம் செய்வதற்காக அவன் அவர்களிடம் சிலவற்றை பேசினான். இவர்கள் யார் என அவன் கேட்டான். அதற்கு இவர்கள் குரை ஆவார்கள் என்று கூறினர். இவர்களில் இந்த கிழவர் யார்? என்று அவன் கேட்டான். அவர் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) ஆவார் என்று மக்கள் கூறினர். அதற்கு இப்னு உமரே! உம்மிடம் ஒன்றைக் குறித்து கேட்க வேண்டும். நீங்கள் எனக்கு கூறுங்கள். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் உஹது நாளன்று ஓடி விட்டார்கள் என்பது உங்களுக்குத் தெரியுமா? அதற்கு அன்னார் ஆம் என்று கூறினார்கள். பின்னர் அவன் கூறினான்: உங்களுக்குத் தெரியுமா? அவர் பதர் போரிலிருந்து விலகி இருந்தார். அதில் கலந்து கொள்ளவில்லை. அதற்கும் அன்னார் ஆம் என்று கூறினார்கள். பின்னர் பைஅத்தே ரிஸ்வானில் கலந்து கொள்ளவில்லை என்பது உங்களுக்குத் தெரியுமா? அதற்கும் அவர்கள் ஆம் என்று கூறினார்கள்.

அப்போது அவன் ஆச்சரியம் அடைந்து அல்லாஹு அக்பர் என்று கூறினான். அதன் பிறகு ஹஸ்ரத் இப்னு உமர் அவர்கள் அவனை இங்கு வாரும் என்று அழைத்தார்கள். நீர் ஆட்சேபனை செய்து விட்டீர். நான் உண்மை நிலவரத்தை உமக்கு விளக்குகிறேன் என்று கூறினார்கள். உஹது போர் நாளன்று அன்னார் ஓடிவிட்டதாக நீர் கூறுகின்றீர். இது குறித்து நான் சாட்சியம் வழங்குகின்றேன். அல்லாஹ் அன்னாரை மன்னித்து விட்டான். மேலும் அன்னாருடன் அல்லாஹ் பாவ மன்னிப்புடன் நடந்து கொண்டான். அப்போது எப்படிப்பட்ட அசாதாரண சூழல் இருந்ததென்றால் நிராகரிப்பாளர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை ஷஹீதாக்கி விட்டதாக தகவல் பரவியது. மேலும் ஒரு தற்காலிக வேதனை மிகுந்த நிலையாக இருந்தது. எனவே அன்னார் அங்கிருந்து சென்று விட்டார்கள்.

பதர் போரில் பங்கு பெறாமல் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் பின் தங்கி விட்டார்கள் என்பதை பற்றி நீர் கூறுவது தொடர்பாக நான் கூற விரும்புவது, அதற்குரிய காரணம் இதுவாகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகள் அன்னாரின் மனைவியாக இருந்தார்கள். அன்னார் நோயுற்றிருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்னாரிடம் நீங்கள் உங்களது மனைவியுடன் தங்கி இருங்கள். உங்களுக்கு பதர் போரில் கலந்து கொண்டதற்கு சமமான நற்கூலியும், போர் செல்வங்களில் பங்கும் கிடைக்கும் என்றும் கூறினார்கள்.

பைஅத்தே ரிஸ்வானில் பங்கு பெறாமல் இருந்ததைப் பொருத்தவரை நன்றாக நினைவிற் கொள்ளுங்கள். மக்காவாசிகளில் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களை விட மிகச் சிறந்த மனிதர் ஒருவர் இருந்திருந்தால் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுக்குப் பகரமாக நிராகரிப்பாளர்களிடம் அவரே தூதராக அனுப்பப்பட்டிருப்பார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களை அனுப்பினார்கள். மேலும் அன்னார் மக்காவாசிகளை நோக்கி சென்றிருந்தபோதுதான் பைஅத்தே ரிஸ்வானும் நடைபெற்றது. மேலும் பைஅத்தே ரிஸ்வானின் சந்தர்ப்பத்தின்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது வலக் கரத்தால் தமது இடக் கரத்தை நோக்கி சைகை செய்தவாறு இது உஸ்மானின் கரமாகும் என்று கூறினார்கள். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தனது இடக் கரத்தை தனது மற்றொரு கரத்தின் மீது அழுத்தமாக வைத்தவாறு இது உஸ்மானுக்காக என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் இப்னு உமர் அவர்கள் இதனைக் கூறிய பிறகு இந்த விஷயத்தையும் உங்களுடன் எடுத்துச் செல்லுங்கள். நினைவிற் கொள்ளுங்கள். இதுவொன்றும் ஆட்சேபனைக்குரிய விஷயமல்ல. செல்லுங்கள் என்று அன்னார் கூறினார்கள்.

(சஹீஹுல் புகாரி, கிதாபுல் ஃபஸாயிலுன் நபி (ஸல்), பாப் மனாகிப் உஸ்மான்... ஹதீஸ் எண் 3698)

இது புகாரியின் அறிவிப்பாகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கையில் மஸ்ஜித் நபவி விரிவாக்கம் செய்யப்பட்டது. அதிலும் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுக்கு பங்கு பெறும் நற்பாக்கியம் கிடைத்திருந்தது.

அபூ மலீஹா தனது தந்தையிடமிருந்து அறிவிக்கின்றார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனா பள்ளிவாசலின் விரிவாக்கத்திற்காக நிலத்தின் ஒரு பகுதியின் சொந்தக்காரராக இருந்த ஒரு அன்ஸாரி சஹாபியை நோக்கி, (அவர் ஓர் அன்ஸாரி சஹாபியாக இருந்தார்.) உங்களுக்கு இந்த ஒரு துண்டு நிலத்திற்கு பகரமாக சொர்க்கத்தில் வீடு கிடைக்கும் என்று கூறினார்கள். ஆனால் அவர் அதைக் கொடுப்பதற்கு மறுத்து விட்டார். பின்னர் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் வந்தார்கள். அந்த நபரிடம் பேசினார்கள். உங்களுக்கு இந்த ஒரு துண்டு நிலத்திற்கு பகரமாக நான் பத்தாயிரம் திர்ஹம் தருகின்றேன் என்று கூறினார்கள். அன்னார் அவரிடமிருந்து அந்த நிலத்தின் சிறு பகுதியை வாங்கிக் கொண்டார்கள்.

பின்னர் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வருகை தந்தார்கள். அன்னார் கூறினார்கள்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! அன்ஸாரியிடமிருந்து நான் வாங்கி வந்துள்ள நிலத்தின் இந்த பகுதியை நீங்கள் பெற்றுக் கொள்ளுங்கள் என்று கூறினார்கள். அப்போது அன்னார் (ஸல்) அவர்கள் அந்த நிலத்தின் சிறு பகுதியை ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களிடமிருந்து சொர்க்கத்தில் வீடு என்பதற்கு பகரமாக வாங்கிக் கொண்டார்கள். உமக்கு சொர்க்கத்தில் வீடு இருக்கும் என்று ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களிடம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். நான் பத்தாயிரம் திர்ஹம்கள் கொடுத்து இந்த வீட்டை வாங்கியுள்ளேன் என்று ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அதன் பிறகு ஒரு செங்கலை வைத்தார்கள். பின்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களை அழைத்தார்கள். அன்னார் ஒரு செங்கலை வைத்தார்கள். பின்னர் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை அழைத்தார்கள். அவர்களும் ஒரு செங்கலை வைத்தார்கள். பின்னர் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் வந்தார்கள். அவர்களும் ஒரு செங்கலை வைத்தார்கள். அதன் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், நீங்கள் அனைவரும் செங்கலை வையுங்கள் என்று எஞ்சிய மக்களிடம் கூறினார்கள். அவர்கள் அனைவரும் வைத்தனர்.

(மஜ்மவுஸ் ஸவாஹித் தொகுதி 9 பக்கம் 65 கிதாபுல் மனாகிப் ஹதீஸ் எண் 14524 – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இவ்வாறு அதற்கான அடித்தளம் அமைக்கப்பட்டது.

ஷுமாமா பின் ஹஸன் குஷைரீ அவர்கள் அறிவிக்கின்றார்கள்: முற்றுகையிடப்பட்ட நேரத்தில் நானும் இருந்தேன். அப்போது ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் எட்டிப் பார்த்து மக்களை நோக்கி இவ்வாறு கூறினார்கள். நான் உங்களுக்கு அல்லாஹ் மற்றும் இஸ்லாத்தின் மீது ஆணையிட்டுக் கூறுகின்றேன்.உங்களுக்குத் தெரியுமா? ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனாவுக்கு வருகை தந்தபோது ரோமா என்ற கிணற்றை தவிர்த்து வேறு எங்கிருந்தும் இனிப்பான தண்ணீருக்கான ஏற்பாடு இருந்திருக்கவில்லை. அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், உங்களில் யார் ரோமா கிணற்றை விலைக்கு வாங்குவார்கள் என்று கேட்டார்கள். ஏனென்றால் அதன் மூலம் முஸ்லிம்கள் அதிலிருந்து தண்ணீர் எடுக்க முடியும். அதாவது அந்த முஸ்லிமும் தண்ணீரை அருந்த முடியும். மற்ற முஸ்லிம்களுக்கும் தண்ணீர் வழங்க முடியும். சொர்க்கம் அதற்கு பகரமாக சிறந்த நற்கூலியாக அவருக்கு கிடைக்கும் என்று கூறினார்கள்.

அப்போது நான் அந்த கிணற்றை விலைக்கு வாங்கினேன். அதாவது ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நான் எனது சொந்த செல்வத்தை கொடுத்து அந்த கிணற்றை வாங்கினேன். அந்த கிணற்றிலிருந்து முஸ்லிம்களும் தண்ணீர் எடுத்தனர். இன்று நீங்கள் அதிலிருந்து தண்ணீர் அருந்துவதை என்னை தடுக்கின்றீர்கள். மேலும் நான் கடல் நீரை குடிக்கும் நிர்பந்தத்திற்கு ஆளாகி விட வேண்டும் என்று நீங்கள் விரும்புகின்றீர்கள். அப்போது அல்லாஹ்வின் மீது ஆணையாக! நீங்கள் கூறியது சரியாகும் என்று மக்கள் கூறினார்கள்.

பின்னர் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: நான் உங்களிடம் அல்லாஹ் மற்றும் இஸ்லாத்தின் மீது ஆணையிட்டுக் கேட்கின்றேன். உங்களுக்குத் தெரியுமா? நான் உஷ்ரா படை மற்றும் தபூக் போர் படை ஆகியவற்றிற்கான ஆயத்த ஏற்பாடுகளை எனது சொந்த செலவில் செய்தேன். அதற்கு அது உண்மை தான் என்று மக்கள் கூறினர். பின்னர் அன்னார் அல்லாஹ் மற்றும் இஸ்லாத்தின் மீது ஆணையிட்டுக் கேட்டார்கள். உங்களுக்குத் தெரியுமா? இந்த நபித்துவ பள்ளிவாசல் தொழுகையாளிகளுக்கு மிகவும் குறுகலாகியபோது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், எந்த நபர் இன்ன குடும்பத்தினரிடமிருந்து நிலத்தின் ஒரு சிறிய பகுதியை விலைக்கு வாங்கி பள்ளிவாசலுடன் இணைத்து விடுவாரோ அவருக்கு சொர்க்கத்தில் அதை விட சிறந்த நற்கூலி கிடைக்கும் என்று கூறினார்கள். எனவே நான் அந்த நிலத்தின் பகுதியை எனது சொந்த செல்வத்தில் விலைக்கு வாங்கி பள்ளிவாசலுடன் இணைத்து விட்டேன். இப்போது நீங்கள் என்னை அந்த பள்ளிவாசலில் இரண்டு ரக்அத் தொழுவதிலிருந்து தடுத்து நிறுத்துகின்றீர்கள். அப்போது அங்கிருந்த மக்கள் அல்லாஹ்வின் மீது ஆணையாக! அது அவ்வாறே ஆகும் என்று கூறினர்.

பின்னர் அன்னார் கூறினார்கள்: நான் உங்களிடம் அல்லாஹ் மற்றும் இஸ்லாத்தின் மீது ஆணையிட்டுக் கேட்கின்றேன். உங்களுக்குத் தெரியுமா? ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்காவின் ஸபீர் என்ற பெயருடைய மலை மீது இருந்தார்கள். அப்போது அன்னாருடன் ஹஸ்ரத் அபூபக்ர் மற்றும் ஹஸ்ரத் உமர் அவர்களும், நானும் இருந்தோம். மலை அதிர்ந்தபோது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அதனை தனது பாதத்தால் தட்டியவாறு, ஸபீர் மலையே அமைதியாகி விடு. ஏனென்றால் உம்மீது ஒரு நபியும், ஒரு சித்தீக்கும், இரண்டு ஷஹீதுகளும் இருக்கின்றனர் என்று கூறினார்கள். அப்போது அந்த மக்கள் அல்லாஹ்வின் மீது ஆணையாக! இது உண்மையாகும் என்று கூறினர்.

அன்னார் கூறினார்கள்: அல்லாஹு அக்பர். கஃபாவின் ரப்பின் மீது ஆணையாக! இந்த மக்கள் எனக்கு ஆதரவாக சாட்சியம் வழங்கி விட்டனர். அதாவது நான் ஷஹாதத்தின் அந்தஸ்தை அடைய இருக்கின்றேன் என்று சாட்சியம் வழங்கி விட்டனர். (சுனன் நிஸாயி... ஹதீஸ் எண் 3638)

மஸ்ஜித் நபவியின் கூடுதல் விரிவாக்கம் பெரும்பாலும் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் காலத்திலேயே நிகழ்ந்தது. எனவே அதனுடைய சுருக்கமான வரலாறையும், ஆரம்ப கால நிலைமைகளையும் மேலும் விரிவாக்கம் பற்றி கூறப்பட்டுள்ள விஷயங்களையும் நான் கூறி விடுகின்றேன். ரபீவுல் அவ்வல் மாதம் ஹிஜ்ரி 1 ஆம் ஆண்டு அக்டோபர் 622 ஆம் ஆண்டு இறுதியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தனது அருளுக்குரிய கரத்தால் மஸ்ஜித் நபவிக்கான அடித்தளத்தை நாட்டினார்கள். அடித்தளம் சுமார் 3 ஸரா அதாவது 1.5 மீட்டர் ஆழம் கொண்டதாக இருந்தது. அடித்தளம் அமைப்பதற்காக கற்கலவைகள் சேர்ந்த செங்லைக் கொண்டு சுவர் கட்டப்பட்டது. வெளியில் உலர்த்தப்பட்ட வறண்ட செங்கல்களைக் கொண்டும் சுவர் எழுப்பப்பட்டது.

(அப்துல் ஹமீத் காதிரி அவர்கள் எழுதிய ஜுஸ்துஜுயே மதீனா என்ற நூல் பக்கம் 430 – 2007 ஆம் ஆண்டு பாகிஸ்தானில் அச்சிடப்பட்டது)

இது பள்ளிவாசலின் சுவர் கட்டுமானத்தின் வரலாறு ஆகும். அத்துடன் விரிவாக்கம் பற்றிய குறிப்பும் கிடைக்கின்றது. பள்ளிவாசலின் சுவர்கள் சுமார் இரண்டு, இரண்டரை மீட்டர் அகலம் கொண்டதாக இருந்தது. சுமார் மூன்றரை மீட்டர் உயரமான சுவர்களாக இருந்தன.

(அப்துல் ஹமீத் காதிரி அவர்கள் எழுதிய ஜுஸ்துஜுயே மதீனா என்ற நூல் பக்கம் 432 – 2007 ஆம் ஆண்டு பாகிஸ்தானில் அச்சிடப்பட்டது)

மஸ்ஜிது நபவியின் கட்டுமானப் பணி ஹிஜ்ரி 1 ஆம் ஆண்டு ஷவ்வால் மாதம் அதாவது ஏப்ரல் மாதம் 623 ஆம் ஆண்டு முழுமை பெற்றது.

(அப்துல் ஹமீத் காதிரி அவர்கள் எழுதிய ஜுஸ்துஜுயே மதீனா என்ற நூல் பக்கம் 435 – 2007 ஆம் ஆண்டு பாகிஸ்தானில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் காரிஜா பின் ஸைது பின் சாபித் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தனது பள்ளிவாசலை சுமார் 35 மீட்டம் நீளம் கொண்டதாகவும், சுமார் 30 மீட்டம் அகலம் கொண்டதாகவும் அமைத்தார்கள்.

(அப்துல் ஹமீத் காதிரி அவர்கள் எழுதிய ஜுஸ்துஜுயே மதீனா என்ற நூல் பக்கம் 437,438 – 2007 ஆம் ஆண்டு பாகிஸ்தானில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தில் முதல் முறையாக ஹிஜ்ரி 7 ஆம் ஆண்டு முஹர்ரம் மாதம் விரிவாக்கப் பணி நடைபெற்றது. அதாவது 628 ஆம் ஆண்டு ஜூன் மாதம் நடைபெற்றது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கைபர் போரிலிருந்து வெற்றி பெற்று திரும்பி வந்தபோது மஸ்ஜிது நபவியை விரிவாக்கம் செய்யுமாறும் புதிதாக கட்டுமானப் பணியை மேற்கொள்ளுமாறும் கட்டளையிட்டார்கள். பள்ளிவாசலின் விரிவாக்கம் தென் பக்கம் நடைபெற்றது. கொஞ்சம் மேற்குப் பக்கமும் நடைபெற்றது. வடக்குப் பக்கத்தில் சஹாபிகள் சிலரது வீடுகளும் இருந்தன. அங்கு ஓர் அன்ஸாரி சஹாபியின் வீடும் இருந்தது. அவருக்கு தனது வீட்டைக் கொடுப்பதற்கு சற்று தயக்கம் இருந்தது. அது பற்றி மேலே ஏற்கெனவே கூறப்பட்டு விட்டது.

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் தனது சொந்த செலவில் பத்தாயிரம் தீனார்கள் கொடுத்து அந்த வீட்டை விலைக்கு வாங்கினார்கள். மேலும் அதனை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் கொடுத்து விட்டார்கள். இவ்வாறு பள்ளிவாசலின் விரிவாக்கப் பணி பெரும்பாலும் வடக்குப் பக்கம் மற்றும் மேற்குப் பக்கத்திலேயே சாத்தியமானது. இந்த விரிவாக்கத்திற்குப் பிறகு பள்ளிவாசலின் மொத்த அளவு 50X50 மீட்டர் என்ற அளவில் ஆனது.

(அப்துல் ஹமீத் காதிரி அவர்கள் எழுதிய ஜுஸ்துஜுயே மதீனா என்ற நூல் பக்கம் 446,447 – 2007 ஆம் ஆண்டு பாகிஸ்தானில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் காலத்தில் இரண்டாவது முறையாக ஹிஜ்ரி 17 ஆம் ஆண்டு விரிவாக்கம் நடைபெற்றது.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தில் பள்ளிவாசல் மண் செங்கலால் கட்டப்பட்டிருந்தது. அதனுடைய கூரை பேரீத்தம் பழ கிளைகளாலும், தழைகளாலும் கட்டப்பட்டிருந்தது. ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்கள் அதனை அதே நிலையிலேயே வைத்திருந்தார்கள். அதில் எந்த மாற்றமும் அல்லது விரிவாக்கமும் செய்யவில்லை. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அதனை புதிதாக கட்டினார்கள். மேலும் விரிவாக்கமும் செய்தார்கள். ஆயினும் அதன் அசல் வடிவம் மற்றும் கட்டுமான நடைமுறையில் எந்த மாற்றத்தையும் செய்ய அனுமதிக்கவில்லை. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹிஜ்ரி 17 ஆம் ஆண்டு தமது மேற்பார்வையில் பள்ளிவாசலின் கட்டுமானப் பணியை முழுமை செய்தார்கள். இந்த அறிவிப்பிலிருந்து தெரிய வருகின்றது. ஹஸ்ரத் அபூபக்ர் அவர்களின் காலத்திலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தில் இருந்ததுபோன்றே பள்ளி இருந்தது. எனினும் அதில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மேற்கொண்ட புதிய கட்டுமானப் பணியினால் போதுமான அளவிற்கு விரிவாக்கம் செய்யப்பட்டு விட்டது.

(அப்துல் ஹமீத் காதிரி அவர்கள் எழுதிய ஜுஸ்துஜுயே மதீனா என்ற நூல் பக்கம் 459 – 2007 ஆம் ஆண்டு பாகிஸ்தானில் அச்சிடப்பட்டது)

பின்னர் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலகட்டத்திலும் மஸ்ஜிது நபவி போதுமான அளவிற்கு விரிவாக்கம் செய்யப்பட்டது. புதிய கட்டுமானப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன. இது ஹிஜ்ரி 29 ஆம் ஆண்டு நிகழ்ந்த சம்பவமாகும். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் மஸ்ஜித் நபவியின் விரிவாக்கப் பணிகள் மற்றும் கட்டுமானப் பணிகளை மேற்கொண்ட போது பள்ளிவாசலை அழகுபடுத்தவும், அதனை பலப்படுத்தவும் பளிங்கு கற்களையும், ஜல்லி கற்களையும் பயன்படுத்தினார்கள். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் கற்களால் ஆன சுவர்களை எழுப்பினார்கள். அதில் வேலைப்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. மேலும் மஸ்ஜிது நபவியில் முதல் முறையாக வெள்ளை அடிப்பதற்காக சுண்ணாம்பு பயன்படுத்தப்பட்டது.

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் ஹிஜ்ரி 24 ஆம் ஆண்டு கலீஃபாவாக தேர்ந்தெடுக்கப்பட்டபோது மக்கள் அவரிடம் மஸ்ஜிது நபவியை விரிவாக்கம் செய்ய வேண்டும் என்று விண்ணப்பித்தார்கள். பள்ளி வளாகம் குறுகியதன் காரணமாக குறிப்பாக ஜுமுஆ தொழுகையின் போது சிக்கல் ஏற்படுவதாக புகார் செய்தார்கள். பெரும்பாலும் மக்களுக்கு பள்ளிவாசலுக்கு வெளியில் தான் தொழுகையை நிறைவேற்ற வேண்டியது ஏற்படுகிறது என்றும் கூறினார்கள். எனவே ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் சஹாபிகளிடம் ஆலோசனை செய்தார்கள். அனைவரும் பழைய பள்ளிவாசலை இடித்து விட்டு அந்த இடத்தில் புதிய பள்ளிவாசலை கட்ட வேண்டும் என்ற கருத்தையே கூறினார்கள். ஒரு நாள் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் லுஹர் தொழுகைக்குப் பிறகு மேடையில் ஏறி சொற்பொழிவு நிகழ்த்தினார்கள்.

அன்னார் கூறினார்கள்: எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே உரியன. நான் பள்ளிவாசலை இடித்து விட்டு இந்த இடத்தில் புதிய பள்ளிவாசலை கட்ட விரும்புகின்றேன். மேலும் நான் சாட்சி கூறுகின்றேன். நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய நாவினால் இவ்வாறு கூறக் கேட்டுள்ளேன். எவர் பள்ளிவாசல் கட்டுவாரோ அல்லாஹ் அவருக்கு சுவர்க்கத்தில் ஒரு வீட்டை வழங்கி விடுகின்றான். எனக்கு முன்பு ஹஸ்ரத் உமர் ஃபாரூக் அவர்கள் இருந்தார்கள். அன்னாரின் கரங்களின் மூலமாக மஸ்ஜிது நபவியின் விரிவாக்கப் பணி நடைபெற்றது. புதிய கட்டுமானப் பணி ஒரு முன்னுதாரணமான பணியாகும்.

நான் சஹாபிகளிடம் ஆலோசனை செய்தேன். அவர்கள் அனைவரின் ஒன்றுபட்ட கருத்து என்னவென்றால், மஸ்ஜிது நபவியை இடித்து விட்டு அதை மீண்டும் கட்ட வேண்டும் என்பதாகும். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் புதிய பள்ளிவாசல் கட்டுமானத் திட்டத்தை முன் வைத்தபோது சில சஹாபிகள் அந்த விவகாரத்தில் தனது சில அச்சங்களை தெரிவித்தனர். பள்ளிவாசலை இடிக்கக் கூடாது என்பது அவர்களின் கருத்தாக இருந்தது. அவர்களில் மஸ்ஜிது நபவிக்கு மிக அருகில் வசித்து வந்த சஹாபிகளும் அடங்குவர். அவர்களின் வீடு இந்த புதிய திட்டத்தால் தாக்கத்திற்கு உள்ளாகும் வாய்ப்பு இருந்தது. மக்களில் பெரும்பான்மை இந்த திட்டத்திற்கு

**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H.Muhammed Lebbai
(Sec.Taleem, Melapalayam)

ஆதரவு தெரிவித்திருந்தது. ஆனால் சில சஹாபிகள் மட்டுமே ஆட்சேபனை தெரிவித்தனர்.

ஹஸ்ரத் அஃப்லஹ் பின் ஹமீது அவர்கள் கூறுகின்றார்கள்: மேடையில் ஏறி மக்களின் கருத்தை அறிய வேண்டும் என ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் விரும்பினார்கள். அப்போது மர்வான் பின் ஹகம் அவர்கள் கூறினார்கள். நிச்சயமாக இது ஒரு நல்ல பணியாகும். எனவே இதில் மக்களின் கருத்தை பெறுவதற்கு என்ன அவசியம் உள்ளது? என்று கேட்டார்கள். அப்போது ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் அன்னாரை கண்டித்தார்கள். மேலும் கண்டித்தவாறு, நான் எந்தவொரு விவகாரத்திலும் மக்கள் மீது பலவந்தம் செய்ய விரும்பவில்லை. நான் நிச்சயம் அவர்களிடம் ஆலோசனை செய்வேன். மேலும் நான் எனது கருத்தை மக்களின் மீது திணிக்க விரும்பவில்லை என்று அன்னார் கூறினார்கள். நான் அவர்களின் விருப்பத்திற்கேற்பவே பணிகளை செய்வேன் என்றும் கூறினார்கள்.

பின்னர் தனது திட்டத்தைக் குறித்து சஹாபிகளின் நம்பிக்கையை பெற்ற பிறகு மஸ்ஜிது நபவியின் வடக்குப் பக்கம் அமைந்திருந்த வீடுகளையும் வாங்கி அதன் நிலங்களை பெற்றுக் கொண்டார்கள். அன்னார் நிவாரணத் தொகையாக அந்த சஹாபிகளுக்கு போதுமான தொகையை வழங்க முன் வந்தபோதும் அந்த சஹாபிகள் தனது வீட்டைக் கொடுப்பதற்கு முன் வரவில்லை. சுமார் 4 ஆண்டுகள் கழிந்து விட்டன. அந்த விவகாரத்தில் எந்த வெற்றியும் கிடைக்கவில்லை.

ஹஸ்ரத் உபைதுல்லாஹ் ஹவ்லானீ அவர்கள் அறிவிக்கின்றார்கள்: மக்கள் தங்களது வீடுகளை கொடுப்பதற்கு தயக்கம் காட்டியபோது ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: நீங்கள் ஏராளமான காரண காரியங்களை கூறி விட்டீர்கள். நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை இவ்வாறு கூறக் கேட்டுள்ளேன். எவர் அல்லாஹ்வின் விருப்பத்திற்காக பள்ளிவாசல் கட்டுவாரோ அதற்கு நற்கூலியாக அதேபோன்ற ஒரு வீடு அவருக்கு சொர்க்கத்தில் கட்டப்படும்.

இதேபோன்று ஹஸ்ரத் மஹ்மூத் பின் லபீத் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் மஸ்ஜித் நபவியை புதிதாக கட்டுவதற்கு எண்ணம் கொண்டபோது மக்களுக்கு அன்னாரின் திட்டம் பிடித்திருக்கவில்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தில் மஸ்ஜிது நபவி எப்படி இருந்ததோ அதே நிலையில் அதனை விட்டு விட வேண்டும் என்று அவர்கள் மீண்டும் மீண்டும் வலியுறுத்தினர். அப்போது அன்னார் கூறினார்கள்: எவர் அல்லாஹ்வின் விருப்பத்திற்காக பள்ளிவாசலை கட்டுவாரோ அவருக்கு அதே போன்ற வீடு சொர்க்கத்தில் கட்டப்படும். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் இந்த கருத்தை ஏற்றுக் கொள்ளச் செய்வதில் வெற்றியடைந்தபோது அன்னார் ரபீவுல் அவ்வல் மாதம் ஹிஜ்ரி 29 ஆம் ஆண்டு அதாவது 649 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பணியை துவக்கி விட்டார்கள். புதிய கட்டுமானப் பணியில் வெறும் மாதங்களே ஆகின. ஹிஜ்ரி 30 ஆம் ஆண்டு முஹர்ரம் 1 ஆம் தேதி மஸ்ஜிது நபவி தயாராகி விட்டது. ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் அனைத்துப் பணிகளையும் தானே மேற்பார்வை செய்து வந்தார்கள். பகல் நேரத்தில் எப்போதும் நோன்பு நோற்று வந்தார்கள். இரவு நேரத்தில் தூக்கம் வந்து விட்டால் பள்ளிவாசலிலேயே உறங்கி வந்தார்கள்.

ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் சஃபீனா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நான் கண்டேன். பள்ளிவாசல் கட்டுமானப் பணிகளுக்காக கலவை சுமந்து வந்து ஹஸ்ரத் உஸ்மான் கனீ அவர்களுக்கு அருகில் வைக்கப்பட்டது. அன்னார் எப்போதும் தமது பாதங்களால் நின்று கொண்டு பணியாளர்களிடம் பணி வாங்கிக் கொண்டிருந்தார்கள். பின்னர் தொழுகைக்கான நேரம் வந்து விட்டால் அவர்களுடன் இணைந்து தொழுவார்கள்.பின்னர் சில நேரம் அங்கேயே உறங்கியும் வந்தார்கள்.ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் மஸ்ஜிது நபவியை தெற்குப் பக்கம் கிப்லாவை நோக்கி அகலப்படுத்தினார்கள். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் காலகட்டத்தில் பள்ளிவாசலில் கதவுகளின் எண்ணிக்கை 6 ஆக இருந்தது. முதல் முறையாக மஸ்ஜிது நபவியில் கற்களில் வேலைப்பாடுகள் செய்யப்பட்டன. மேலும் வெள்ளையடிக்கப்பட்டது.

ஹஸ்ரத் காரிஜா பின் ஸைதின் கூற்றிற்கேற்ப ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் மஸ்ஜிது நபவியின் கிழக்கு மற்றும் மேற்கு பக்க சுவர்களில் ஜன்னல்களை வைத்தார்கள். மஸ்ஜிது நபவியின் விரிவாக்கத்திற்காக ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் வாங்கிய வீடுகளில் உம்முல் மூமினீன் ஹஸ்ரத் ஹஃப்ஸா அவர்களின் அறையும் அடங்கும். அதுமட்டுமின்றி ஹஸ்ரத் ஜாஃபர் பின் அபீ தாலிப் அவர்களின் வாரிசுகளிடமிருந்து அவர்களின் வீட்டின் பாதிப் பகுதி ஒரு லட்சம் திர்ஹமிற்கு பகரமாக வாங்கப்பட்டது. இவ்வாறு தாருல் அப்பாஸின் சில பகுதி வாங்கப்பட்டு மஸ்ஜிது நபவியுடன் இணைக்கப்பட்டது.

மஸ்ஜிது நபிவியின் மெஹ்ராபில் நின்று தொழுகை நடத்தியபோது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் ஷஹாதத் சம்பவம் நடைபெற்றது. எனவே எதிர்காலத்தில் இதுபோன்ற சம்பவம் நடைபெறாமல் இருப்பதை உறுதிப்படுத்துவதற்காக ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் மெஹ்ராபின் இடத்தில் ஒரு பாதுகாப்பு வளையத்தை அமைத்தார்கள். மஸ்ஜிது நபவியில் கட்டப்பட்ட முதலாவது பாதுகாப்பு வழிமுறையாக அது இருந்தது. அது பிற்காலத்தில் சிரியாவில் பனு உமைய்யாவின் கலீஃபாக்களின் பாதுகாப்பு வழிமுறையின் ஒரு அங்கமாக ஆகி விட்டது.

(அப்துல் ஹமீத் காதிரி அவர்கள் எழுதிய ஜுஸ்துஜுயே மதீனா என்ற நூல் பக்கம் 463–465 – 2007 ஆம் ஆண்டு பாகிஸ்தானில் அச்சிடப்பட்டது)

அதாவது மெஹ்ராபில் ஒரு சுவர் எழுப்பப்பட்டு பாதுகாக்கப்பட்டது. ஆயினும் பின்னால் நின்று தொழுபவர்களால் இமாமை பார்க்க முடிந்தது. எவ்வாறிருப்பினும் இதன் பிறகு பல்வேறு நேரங்களில் பள்ளிவாசல் விரிவாக்கப் பணி நடைபெற்று வந்தது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: நான் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களை ஹஸ்ரத் சுலைமான் அவர்களுடன் ஒப்பீடு செய்து பார்க்கின்றேன். அன்னாருக்கும் கட்டுமான கலையில் மிகவும் ஆர்வம் இருந்தது. ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களின் காலத்தில் நிச்சயம் உட்புற குழப்பம் இருந்தது. ஒரு பக்கம் முஆவியா இருந்தார்கள். மற்றொரு பக்கம் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் இருந்தார்கள். இந்தக் குழப்பங்களின் காரணமாக முஸ்லிம்களின் இரத்தம் சிந்தப்பட்டது. 6 ஆண்டுகளில் இஸ்லாத்திற்காக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுடன் இஸ்லாத்திற்காக மேற்கொள்ளப்பட்ட அனைத்து நடவடிக்கைகளும் முற்றுப் பெற்று விட்டன. அதன் பிறகு உள்நாட்டுப் போர் தொடங்கியது. (மல்ஃபூஸாத் தொகுதி 8 பக்கம் 278)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: பள்ளிவாசல் என்பது வேலைப்பாடுகள் கொண்டதாகவும், மிகவும் உயரமான உறுதியான கட்டடமாகவும் இருக்க வேண்டும் என்பது அவசியமில்லை. மாறாக, நிலத்தில் தளம் அமைக்கப்படுவதே போதுமானதாகும். மேலும் அங்கு பள்ளிவாசலின் எல்லை வரையறுக்கப்பட வேண்டும். மழையிலிருந்து பாதுகாப்பு பெறுவதற்காக மூங்கில் கம்புகளால் கூரை அமைக்கப்படுவது போதுமானதாகும். இறைவன் செயற்கையை விரும்பவில்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பள்ளிவாசல் பேரீத்தம் பழ மரத்ததின் கிளைகளால் அமைக்கப்பட்டது. அவ்வாறே அது தொடர்ந்தது. பின்னர் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் அதனை தனது காலத்தில்

**திருக்குர்ஆனிலிருந்து...**

(செவியேற்பவரே!) இப்ராஹீம் இவ்வாறு கூறிய நேரத்தை (நினைத்துப் பாரும்). என் இறைவா! இந்த (மக்கா) நகரத்தை அமைதிக்குரியதாக்கி வைப்பாயாக. நாங்கள் பொய் தெய்வங்களை வணங்குவதிலிருந்து என்னையும், என் சந்ததிகளையும் காப்பாயாக. (14:36)

A.Basheer Ahmad
(Naib Sec.Maal, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

பின்னர் நம்பிக்கை கொண்டு நற்செயல்களைச் செய்தவர்களுக்கு அவர்களின் நற்பலன்களை முழுமையாக வழங்குவதுடன் அவன் தனது அருளிலிருந்து அவர்களுக்கு மிகுதியாக வழங்குவான். (4:174)

Mohaideen Ali & M.Sabahul Islam
Melapalayam

உறுதிவாய்ந்ததாக ஆக்கினார்கள். அன்னாருக்கு கட்டடக் கலையில் மிகுந்த ஆர்வம் இருந்தது. ஹஸ்ரத் சுலைமான் மற்றும் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் பெயர்கள் ஒன்றுபடுகின்றன. இந்த அடிப்படையில் அன்னாருக்கு அந்த விஷயத்தில் அதிக ஆர்வம் இருந்தது என்று நான் கருதுகின்றேன். (மல்ஃபூஸாத் தொகுதி 7 பக்கம் 119)

ஹிஜ்ரி 26 ஆம் ஆண்டு மஸ்ஜிதுல் ஹராமின் விரிவாக்கப் பணி நடைபெற்றது. ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் ஹரமின் அடையாளங்களை புத்தம் புதிதாக ஆக்கினார்கள். மேலும் மஸ்ஜிதுல் ஹராமில் விரிவாக்கப் பணிகளை மேற்கொண்டார்கள். மேலும் அக்கம் பக்கத்திலிருந்த வீடுகளை மஸ்ஜிதுல் ஹராமுடன் இணைத்தார்கள். சில மக்கள் தமது விருப்பத்தின் பெயரில் தமது வீட்டை விற்றார்கள். ஆனால் சிலர் தமது வீடுகளை விற்க தயாராக இல்லை. ஆனால் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் அந்த மக்களை எல்லா வகையிலும் சமாதானப்படுத்த முயற்சி செய்தார்கள். ஆனால் அவர்கள் தங்களின் நிலைப்பாட்டில் உறுதியாக இருந்தார்கள்.

இறுதியில் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் கட்டளையினால் அந்த அனைத்து வீடுகளும் இடிக்கப்பட்டன. அதனுடைய தொகையை அன்னார் பைத்துல் மாலில் செலுத்தி விட்டார்கள். அதனால் அந்த மக்கள் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுக்கு எதிராக கூச்சலிட்டார்கள். அப்போது அவர்களை கைது செய்து சிறைக்கு அனுப்புமாறு ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் கட்டளையிட்டார்கள்.

அதன் பிறகு நீங்கள் அறிவீர்களா? எந்த விஷயத்தின் காரணமாக உங்களுக்கு எனக்கு எதிராக செயல்பட இந்த துணிவு வந்துள்ளது. இந்த துணிவிற்கான காரணம் எனது மென்மை மட்டுமே ஆகும். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களும் உங்களுடன் அவ்வாறே நடந்து கொண்டார்கள். ஆனால் அவர்களுக்கு எதிராக நீங்கள் எந்த ஆர்ப்பாட்டமும் செய்யவில்லை என்று அன்னார் (ரலி) அவர்கள் கூறினார்கள். அதன் பிறகு அப்துல்லாஹ் பின் காலித் பின் உஸைது என்பவர் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களிடம் அந்த ஆர்ப்பாட்டம் செய்தவர்களைப் பற்றி பேசியதால் அவர்கள் விடுவிக்கப்பட்டார்கள்.

(தாரீக் திப்ரி தொகுதி 5 பக்கம் 92... 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது)

முதலாவது இஸ்லாமிய கடற்படை ஹிஜ்ரி 28 ஆம் ஆண்டு ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் காலத்தில் உருவாக்கப்பட்டது. அமீர் முஆவியா பின் அபீ சுஃப்யான் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் கடற்போர் செய்த முதல் நபர் ஆவார்கள். அமீர் முஆவியா அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் கடற்போர் செய்வதற்கு அனுமதி வேண்டினார்கள். ஆனால் அன்னார் அதற்கு அனுமதி வழங்கவில்லை. ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் கலீஃபாவாக தேர்ந்தெடுக்கப்பட்டபோது அமீர் முஆவியா மீண்டும் மீண்டும் பேசி வந்தார்கள். மேலும் அனுமதி வேண்டினார். இறுதியில் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் அன்னாருக்கு அனுமதி வழங்கினார்கள்.

மேலும் நீங்கள் மக்களை சுயமாக தேர்ந்தெடுக்கக்கூடாது. மேலும் அவர்களுக்குள் சீட்டுக் குலுக்கிப் போட்டு தேர்ந்தெடுக்கவும் கூடாது. மாறாக, அவர்களின் விருப்பத்தின் அடிப்படையில் தேர்ந்தெடுக்க வேண்டும். எவர் தனது விருப்பத்தால் இந்த போரில் பங்கு பெற விரும்புவாரோ அவரை மட்டும் அழைத்துச் செல்லுங்கள். மேலும் அவருக்கு உதவி செய்யுங்கள் என்று கூறினார்கள். எனவே அமீர் முஆவியாவும் அவ்வாறே செய்தார்கள். அப்துல்லாஹ் பின் கைஸ் என்பவரை கடற்படையின் தலைவராக ஆக்கினார்கள். அன்னார் கடலில் கோடை காலத்திலும், குளிர் காலத்தில் ஐம்பது போர் செய்துள்ளார்கள். இந்தப் போர்களில் முஸ்லிம்களில் எந்தவொரு வீரரும் கடலில் மூழ்கவுமில்லை; அல்லது எவருக்கும் எந்த பாதிப்பும் ஏற்படவுமில்லை.

(தாரீக் திப்ரி தொகுதி 5 பக்கம் 97)

திருக்குர்ஆனிலிருந்து...

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளோம். (51:57)

A.Nasir Ahmad (Ameer, Melapalayam)

அறிவிப்பில் வருகின்றது: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் நல்லொழுக்கங்களில் எல்லாரையும் விட அதிகமாக ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் ஒப்புமை பெற்றிருந்தார்கள்.

ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் உஸ்மான் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஒரு முறை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது மகளை பார்ப்பதற்கு வருகை தந்தார்கள். அப்போது அன்னார் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் தலையை கழுவிக் கொண்டிருந்தார்கள். எனது மகளே! அபூ அப்தில்லாஹ் அதாவது உஸ்மான் அவர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்வீராக. ஏனென்றால் இவர் எனது சஹாபிகளில் நல்லொழுக்கத்தின் அடிப்படையில் எல்லாரையும் விட எனக்கு மிகுந்த ஒப்புமை கொண்டவராக இருக்கின்றார் என்று கூறினார்கள்.

(மஜ்மவுஸ் ஸவாஹித்.... பக்கம் 58 கிதாபுல் மனாகிப், ஹதீஸ் எண் 14500 – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் யஹ்யா பின் அப்துர் ரஹ்மான் பின் ஹாதிப் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நான் எனது தந்தையிடமிருந்து இவ்வாறு கூறக் கேட்டுள்ளேன். அன்னார் கூறினார்கள்: நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சஹாபிகளில் விஷயத்தை முழுமையாகவும், அழகிய முறையிலும் எடுத்துக் கூறுவதில் சிறந்தவராக ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களை விட வேறு எவரையும் கண்டதில்லை. இருந்தபோதிலும் அன்னார் மிக அதிகமாக பேசுவதிலிருந்து தவிர்ந்திருந்தார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 32 உஸ்மான் பின் அஃபான்– 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தார் அஹ்யாவுத் தராஸில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நான் ருகய்யா பின்த் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் சமூகத்தில் ஆஜரானேன். ஒருவேளை இங்கு ஹஸ்ரத் ருகய்யா அவர்களுக்கு பகரமாக ஹஸ்ரத் உம்மே குல்ஸூம் அவர்களாக இருக்கலாம். ஏனெனில் அறிவிப்பில் வருகிறது. பதர் போரின் சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் ருகய்யா அவர்கள் மரணமடைந்திருந்தார்கள். ஹஸ்ரத் அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் அதன் பிறகு ஐந்து ஆண்டுகள் கழித்து தான் முஸ்லிம் ஆனார்கள். மதீனாவிற்கு வருகை தந்திருந்தார்கள். எனவே உம்மே குல்ஸூம் அவர்களே அங்கு இருந்திருக்கக் கூடும். ஏனென்றால் அன்னாரின் மரணம் ஹிஜ்ரி 9 ஆம் ஆண்டு நிகழ்ந்திருந்தது. எவ்வாறிருப்பினும் இது அறிவிப்பாகும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகளும், ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் மனைவியிடத்தில் அன்னார் வருகை தந்தார்கள். அப்போது அன்னாரின் கரங்களில் சீப்பு இருந்தது. அன்னார் கூறினார்கள்: இப்போது தான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வருகை தந்திருந்தார்கள். நான் சீப்பினால் அன்னாரின் தலையை சீவினேன். அப்போது அன்னார் என்னிடம் நீங்கள் அபூ அப்தில்லாஹ்வை அதாவது ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களை எவ்வாறு காண்கின்றீர்கள்? என்று கேட்டார்கள். அதற்கு நான் மிக நல்லவராக காண்கின்றேன் என்று கூறினேன். அதற்கு அன்னார், அன்னாரிடம் மிகவும் கண்ணியமான முறையில் நடந்து கொள்ளுங்கள் என்று கூறினார்கள். ஏனென்றால் எனது சஹாபிகளில் நல்லொழுக்கத்தின் அடிப்படையில் எல்லாரையும் விட அன்னார் எனக்கு மிகவும் ஒப்புமை உடையவராக இருந்தார்கள் என்று கூறினார்கள்.

(மஜ்மவுஸ் ஸவாஹித்.... பக்கம் 58 கிதாபுல் மனாகிப், ஹதீஸ் எண் 14501 – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களைப் பற்றிய குறிப்பு இத்துடன் நிறைவு பெறுகிறது. இன்றும் நான் சில ஜனாஸா தொழுகைகளை தொழ வைக்க இருக்கின்றேன். அவர்களின் நற்குறிப்பை செய்ய விரும்புகின்றேன்.

திருக்குர்ஆனிலிருந்து...

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே துயில் கொண்டனர். (54:18)

A.Shamsul Alam (Qaid, Melapalayam)

முதலாவது ஜனாஸா அஹ்மத் பக்ஷ் சாஹிப் அவர்களின் மகனாகிய வக்ஃபே ஜதீத் முஅல்லிம் முபஷ்ஷிர் அஹ்மது ரங் சாஹிப் அவர்களுடையதாகும். அன்னார் மார்ச் மாதம் 10 ஆம் தேதி இறை நியதிக்கேற்ப மரணமடைந்து விட்டார்கள். اِنَّا لِلّٰہِ وَاِنَّآ اِلَیْہِ رَاجِعُوْنَ

அன்னார் டேரா காஸி கான் மாவட்டத்தைச் சேர்ந்த ரந்தான் என்ற ஊரைச் சார்ந்தவராக இருந்தார்கள். பிறப்பால் அஹ்மதியாக இருந்தார்கள். 1990 ஆம் ஆண்டில் முஅல்லிமாக அன்னார் வக்பே ஜதீத் துறையில் தொண்டை ஆரம்பம் செய்தார்கள். பின்னர் பல்வேறு நேரங்களில், பல்வேறு இடங்களில் முஅல்லிமாகவும், இன்ஸ்பெக்டராகவும் பணி செய்துள்ளார்கள். எங்கெல்லாம் அவர் அனுப்பப்பட்டாரோ எப்போதும் லெப்பைக் என கூறி வந்தார்கள். ஒருபோதும் எந்த காரண காரியங்களையும் முன் வைக்கவில்லை. வக்ஃபை எப்போதும் நன்றியுணர்வுடன் செயல்படுத்த முயற்சி செய்தார்கள்.

நம்மவர்களும் அந்நியர்களும் அனைவரும் அவரைப் பற்றி எழுதியுள்ளனர். மிகவும் கடின உழைப்பாளியாகவும், துஆ செய்யக் கூடியவராகவும் தொடர்ந்து தஹஜ்ஜுத் தொழக் கூடியவராகவும், இறைவன் பால் மக்களை அழைக்கக் கூடியவராகவும் இருந்தார்கள். நல்ல சொற்பொழிவாளராகவும், இனிமையாக பழகுபவராகவும் விருந்து உபசரிப்பு செய்பவராகவும், நல்லியல்பு படைத்தவராகவும், பணிவான மனிதராகவும் இருந்தார்கள். எப்பொழுதும் மென்மையான நடைமுறையை கையாண்டார்கள். இனிமையான கூற்றுகளையே பேசி வந்தார்கள். ஆயினும் ஜமாஅத் அமைப்பு மற்றும் கிலாஃபத்திற்கு எதிராக ஏதாவது விஷயத்தை செவியுற்றால் பின்னர் கூர்மையான வாளைப் போன்று ஆகி விடுவார்கள். அந்த நபருக்கு சீர்திருத்தம் செய்து விடாதவரை அந்த சபையிலிருந்து எழுந்து செல்ல மாட்டார்கள்.

தனக்குப் பின்னால் தனது மனைவி மட்டுமின்றி இரண்டு மகன்கள் மற்றும் மூன்று மகள்களை விட்டுச் சென்றுள்ளார்கள். அன்னாரின் இளைய மகன் ஷாஸில் அஹ்மது ரப்வாவிலுள்ள ஜாமிஆ அஹ்மதிய்யாவில் தர்ஜா சாலிஸாவில் மாணவராக இருக்கின்றார். அல்லாஹ் மர்ஹூமுடன் பாவ மன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக.

அடுத்த ஜனாஸா முனீர் அஹ்மத் ஃபரக் சாஹிப் அவர்களுடையதாகும். அன்னார் இஸ்லாமாபாத் மாவட்டத்தின் முன்னாள் அமீராக இருந்துள்ளார்கள். நீண்ட நாட்கள் நோயுற்றிருந்த பிறகு மார்ச் மாதம் 9 ஆம் தேதி 84 வது வயதில் கனடாவில் அன்னாரின் மரணம் நிகழ்ந்துள்ளது. اِنَّا لِلّٰہِ وَاِنَّآ اِلَیْہِ رَاجِعُوْنَ

அன்னார் 1/9 ஐ வஸிய்யத் செய்து மூஸியாக இருந்தார்கள். முனீர் ஃபரக் சாஹிப் அவர்களின் தந்தைவழி பாட்டனார் பெயர் ஹஸ்ரத் முன்ஷி அஹ்மத் பக்ஷ் சாஹிப் ஆகும். அன்னார் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சஹாபி ஆவார்கள். அன்னார் காதியானிற்கு சென்று 1903 ஆம் ஆண்டு ஜல்ஸா ஸாலானாவில் பைஅத் செய்வதற்கு நற்பாக்கியம் பெற்றார்கள். அன்னாரின் தந்தை பெயர் டாக்டர் சவுத்ரி அப்துல் அஹத் சாஹிப் ஆகும்.

அன்னார் MSC மற்றும் Phd பட்டம் பெற்றிருந்தார்கள். விவசாயத் துறையில் இந்தப் பட்டம் பெற்றார்கள். அக்காலத்தில் Phd செய்வது மிகவும் புத்திக்கூர்மை கொண்டவர்களின் பணியாக இருந்தது. எவ்வாறிருப்பினும் அன்னார் Phd செய்தார்கள்.

அன்னார் சிறிது காலம் லயிபூர் ஜமாஅத்தின் அமீராகவும் தொண்டாற்றியுள்ளார்கள். 1944 ஆம் ஆண்டில் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபா (ரலி) அவர்கள் அஹ்மதி இளைஞர்களை குறிப்பாக அறிவியல் அறிஞர்களை மார்க்கத்திற்கு தொண்டாற்றுவதற்கு அறிவுறுத்தினார்கள். அப்போது ஃபரக் சாஹிப் அவர்களின் தந்தை அவர்களும் வக்ஃப் செய்தார்கள். அரசாங்க வேலையை விட்டு விட்டு குடும்பத்துடன் காதியானிற்கு இடம் பெயர்ந்து விட்டார்கள். அப்போது ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபா (ரலி) அவர்களின் நேரடிப் பார்வையில் ஃபஸ்லே உமர் ரிஸர்ச் இன்ஸ்டிடியூட் ஏற்படுத்தப்பட்டிருந்தது. ஹுஸூர் அவர்கள் அன்னாரை ஃபஸ்லே உமர் ரிஸர்ச் இன்ஸ்டிடியூட்டின் இயக்குநராக நியமனம் செய்தார்கள். அத்துடன் தஃலீமுல் இஸ்லாம் கல்லூரியில் அறிவியல் ஆசிரியராகவும் அன்னாரை நியமனம் செய்தார்கள்.

ஃபரக் சாஹிப் அவர்கள் University of Engineering and technology ல் electrical engineering படிப்பிற்கான பட்டத்தை பெற்றிருந்தார்கள். மேலும் பல்வேறு இடங்களில் பணிகளையும் தொடங்கி இருந்தார்கள். பின்னர் Telegraph & Telephone என்ற பாகிஸ்தான் அரசாங்கத் துறையில் முறையாக பணியை துவங்கி இருந்தார்கள். இந்த பணியின் போது நாட்டின் பல்வேறு நகரங்களில் அன்னார் தொண்டாற்றியுள்ளார்கள். பல்வேறு நாடுகளில் பாகிஸ்தான் அரசாங்கத்தின் பிரதிநிதியாக அன்னார் சென்று வந்தார்கள். 1997 ஆம் ஆண்டில் Director General Pakistan Teli Comunications என்ற பொறுப்பிலிருந்து அன்னார் ஒய்வு பெற்றார்கள்.

அன்னாருக்கு ஒரு மனைவியும், இரண்டு மகள்களும், இரண்டு மகன்களும் உள்ளனர். அல்லாஹ் அன்னாரின் பிள்ளைகளுக்கும் அன்னாரின் அடிச்சுவட்டின் வழி நடப்பதற்கு நற்பாக்கியம் வழங்குவானாக.

ராவல்பிண்டியில் தங்கியிருந்தபோது மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யாவின் மாவட்ட காயிதாக தொண்டாற்றும் நற்பாக்கியம் அன்னாருக்கு கிடைத்தது. 1974 ஆம் ஆண்டு கண்ணீர் சிந்தப்பட்ட மிக கடினமான காலகட்டமாக இருந்தது. எவ்வாறிருப்பினும் அக்காலத்தில் தொண்டாற்றும் நற்பாக்கியம் அன்னாருக்கு கிடைத்தது. 1977 ஆம் ஆண்டில் இஸ்லாமாபாத்திற்கு நிரந்தரமாக குடிபெயர்ந்த பிறகு பல்வேறு தொண்டுகளுக்கான நற்பாக்கியம் அன்னாருக்கு கிடைத்தது. 1990 ஆம் ஆண்டில் அன்னார் நாயிப் அமீர் அவ்வல் ஆக தொண்டாற்றும் நற்பாக்கியம் பெற்றார்கள்.

அன்னார் ஒய்வு பெற்ற பிறகு வக்ஃப் செய்தார்கள். ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்களின் சமூகத்தில் சுயமே தன்னை முன் வைத்தார்கள். பின்னர் அவர்களுக்கு ஒப்புதல் கிடைத்தது. 1999 ஆம் ஆண்டு இஸ்லாமாபாத் நகரத்தின் அமீர் ஜமாஅத்தாகவும், மாவட்ட அமீராகவும் தொண்டாற்ற அன்னார் நியமிக்கப்பட்டார்கள். பல்வேறு துறைகளில் கௌரவ உறுப்பினராகவும், இன்னும் பல்வேறு வகையிலும் தொண்டிற்கான நற்பாக்கியம் அன்னாருக்கு கிடைத்தது.

1996 ஆம் ஆண்டில் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள் அன்னாரை Director Fazle Umar foundation ஆக நியமனம் செய்தார்கள். அந்த பொறுப்பில் இறுதி மூச்சு வரை அன்னார் நியமிக்கப்பட்டிருந்தார்கள். மேலும் அதில் அன்னார் தொண்டாற்றி வந்தார்கள். 1980 ஆம் ஆண்டில் ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களின் காலத்தில் ரப்வாவின் ஆண்டு மாநாட்டின் சந்தர்ப்பத்தில் வெளி நாடுகளிலிருந்து வருகின்ற விருந்தினர்களுக்காக ஆண்டு மாநாடுகளில் சொற்பொழிவின் மொழிபெயர்ப்புப் பணி தொடங்கியது. அப்போது அஹ்மதி பொறியாளர்களைக் கொண்ட குழு ஒன்று தயார் செய்யப்பட்டது. அதிலும் அன்னார் மிகவும் உழைப்புடன் பணி செய்தார்கள். அசாதாரண பணிகளை செய்வதற்கு அன்னாருக்கு வாய்ப்பு கிடைத்தது. அந்த குழுவின் முன்தஸிம் ஆஃலாவாக முனீர் ஃபரக் சாஹிப் அவர்களே இருந்தார்கள்.

1984 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் இங்கிலாந்திற்கு ஹிஜ்ரத் செய்தபோது யூ.கே ஜல்ஸா சாலானாவிலும் தொடந்து ஒவ்வொரு ஆண்டும் வந்தார்கள். மொழியாக்கப் பணி அவர்களிடமே ஒப்படைக்கப்பட்டிருந்தது. மக்களுக்கு மொழியாக்கத்தை எட்டச் செய்வதில் மிகவும் அழகிய முறையில் அன்னார் தொண்டாற்றினார்கள். மிகக் கடின உழைப்புடன் அன்னார் பணி செய்து வந்தார்கள். அன்னார் அமீராக இருந்த காலகட்டத்தில் இஸ்லாமாபாத்திலும் ஜமாஅத்தின் கட்டுமானப் பணிகள் அதிகமாக நடந்துள்ளன.

அன்னாரின் ஒரு மகன் கூறுகின்றார்: ஜமாஅத் பணிகளில் போட்டி போட்டுக் கொண்டு பங்கு பெறுவதற்கு பிள்ளைகளுக்கு அன்னார் அறிவுரை செய்து வந்தார்கள். அரசாங்கத்தில் பணி செய்து வந்த போதிலும் ஜமாஅத்திற்கு தொண்டாற்றுவதில் எப்பொழுதும் முன்னனியில் இருந்து வந்தார்கள். தனது பணியை முடித்து விட்டு நேரடியாக ஜமாஅத் அலுவலகத்திற்கே வருவார்கள். மேலும் ஜமாஅத்தின் கடமைகளை நிறைவேற்றுவார்கள். ஒவ்வொரு ஆண்டும் யூ.கே ஜல்ஸா ஸாலானவிற்காக குறிப்பாக விடுமுறையை சேர்த்து வந்தார்கள். பணி செய்து வந்த காலத்தில் அஹ்மதியாக இருந்த காரணத்தால் தொலை தூர பகுதிகளில் பணியமர்த்தப்பட்டார்கள்.

டேரா இஸ்மாயீல் கானில் (ஓர் ஊரின் பெயர்) பணியமர்த்தப்பட்டார்கள். அப்போது பிரதமர் பூட்டோ சாஹிப் இவரை மீண்டும் இஸ்லாமாபாதில் பணியமர்த்தக் கூடாது என்று கூறினார். ஆனால் அல்லாஹ் அருள் செய்தான். அன்னார் மீண்டும் இஸ்லாமாபாத்தில் பணியமர்த்தப்பட்டார்கள். பின்னர் அங்கிருந்து பல்வேறு நாடுகளில் அரசாங்கத்தின் பிரதிநிதியாக செல்வதற்கும் நற்பாக்கியம் கிடைத்தது. அல்லாஹ் அன்னாருடன் பாவ மன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக.

அடுத்த ஜனாஸா ப்ரிகேடியர் லத்தீஃப் முஹம்மத் லத்தீஃப் சாஹிப் அவர்களுடையதாகும். அன்னார் ராவல்பிண்டியின் முன்னாள் மாவட்ட அமீராகவும் இருந்துள்ளார்கள். 28 பிப்ரவரி அன்று 77 வது வயதில் அன்னாரின் மரணம் நிகழ்ந்துள்ளது. اِنَّا لِلّٰہِ وَاِنَّاۤ اِلَیۡہِ رَاجِعُوۡنَ

லத்தீஃப் சாஹிப் அவர்கள் தனது தந்தையுடன் 1955 ஆம் ஆண்டு அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொண்டார்கள். அன்னாரின் தந்தை 2000 ஆம் ஆண்டில் மரணமடைந்தார்கள். அதன் பிறகு குடும்பத்தில் அவர் மட்டுமே அஹ்மதியாக இருந்தார்கள். அதாவது அவர்களின் பிள்ளைகளைத் தவிர. மர்ஹூமிற்கு ஒரு மனைவியும், இரண்டு மகன்களும், இரண்டு மகள்களும் உள்ளனர். அன்னாரின் பிள்ளைகளுக்கும் அன்னாரின் அடிச்சுவட்டின் படி நடப்பதற்கு அல்லாஹ் நற்பாக்கியத்தை வழங்குவானாக.

2000 ஆம் ஆண்டு தனது ஓய்விற்குப் பிறகு தனது முழு நேரத்தையும் ஜமாஅத்திற்கு தொண்டாற்றுவதிலேயே அன்னார் செலவிட்டு வந்தார்கள். உமூரே ஆமா செயலராகவும், மாவட்ட துணை அமீர் ராவல்பிண்டியாகவும் இருந்துள்ளார்கள். 2019 முதல் 2021 மரணம் வரை ராவல்பிண்டி மாவட்ட அமீராக தொண்டாற்றும் நற்பாக்கியத்தை பெற்றுள்ளார்கள். சுமார் 20 ஆண்டுகள் வரை ஜமாஅத்திற்கு தொண்டாற்றும் நற்பாக்கியம் அன்னாருக்கு கிடைத்துள்ளது. மிகவும் அனுதாபம் கொண்டவராகவும், ஏழைகளை கருத்தில் கொள்பவராகவும், ஜமாஅத்திற்கு தொண்டாற்றுவதை இறை அருளாக கருதுபவராகவும் இருந்து வந்தார்கள். தமது பிள்ளைகளுக்கும் அதே அறிவுரையை செய்து வந்தார்கள்.

தனது இறுதி காலகட்டத்தில் கடுமையாக நோயுற்றிருந்த போதிலும் தலைமையகத்திலிருந்து ஏதாவது ஒரு பொறுப்பாளர் ஜமாஅத்தின் தொண்டுக்காக அவரை அழைத்தால் உடனே சென்று வந்தார்கள். தனது நோயை அன்னார் பொருட்படுத்தியதில்லை. அன்னாருக்கு கேன்ஸர் நோய் ஏற்பட்டிருந்தது. தனக்குரிய சிகிச்சையையும் அத்துடன் செய்து வந்தார்கள். அவ்வாறிருந்தும் தொண்டிற்காக எப்போதும் ஆயத்தமாக இருந்தார்கள். ஒருபோதும் மறுக்கவில்லை. அல்லாஹ் அன்னாருடன் பாவ மன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக.

அடுத்த ஜனாஸா மதிப்பிற்குரிய கவ்நக் பேக் சாஹிப் அவர்களுடையதாகும். அவர் கைரிஸ்தானைச் சேர்ந்த அஹ்மதி ஆவார். 22 பிப்ரவரி அன்று தனது 67 வயதில் அன்னார் மரணமடைந்து விட்டார்கள். اِنَّا لِلّٰہِ وَاِنَّاۤ اِلَیۡہِ رَاجِعُوۡنَ

கைரிஸ்தானின் தேசிய தலைவரான இல்யாஸ் குபாதோ சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்: மர்ஹூம் நோக் சாஹிப் அவர்களுடன் எனக்கு 15 ஆண்டுகளை விடவும் அதிகமான காலகட்டம் தொடர்பு இருந்தது. மர்ஹூம் கைரிஸ்தான் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் ஆரம்ப கால உறுப்பினர்களில் ஒருவராக இருந்தார்கள். மர்ஹூம் 2000 ஆம் ஆண்டு அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொண்டிருந்தார்கள். மர்ஹூம் மிகவும் கலப்பற்ற நபராகவும், நன்றியுணர்வுமிக்க அஹ்மதி ஆகவும் இருந்தார்கள். எப்போதும் ஜமாஅத் நிகழ்ச்சிகளில் பங்கு பெற்று வந்தார்கள். முறையாக ஜமாஅத் சந்தாக்களை செலுத்தி வந்தார்கள். மேலும் ஏனைய பொருள் தியாகங்களிலும் பங்கு பெற்று வந்தார்கள். குறித்த நேரத்தில் தனது வாக்குறுதியை செலுத்தி வந்தார்கள்.

குறித்த நேரத்தில் ஐவேளை தொழுகையை நிறைவேற்றி வந்தார்கள். தொடர்ந்து தஹஜ்ஜுத் தொழுது வந்தார்கள். சோவியத் யூனியன் காலகட்டத்தில் மர்ஹூம் தனது இளமைப் பருவத்தில் நாட்டின் பெரிய நிறுவனங்களிலும், வியாபார அமைப்புகளிலும் தலைமைத்துவ பொறுப்புகளை வகித்து வந்தார்கள். அன்னாரின் நேர்மை மற்றும் கண்ணியம், கடின உழைப்பு ஆகியவற்றின் காரணமாக அனைவரும் அன்னாரை மிகவும் பாராட்டி வந்துள்ளார்கள்.

வாழ்க்கையின் கடைசி ஆண்டுகளில் பணி ஏதும் செய்யாத போது அன்னார் புத்தகங்களை விற்று வந்தார்கள். குறிப்பாக இஸ்லாமிய புத்தகங்களை விற்று வந்தார்கள். கஜகிஸ்தானில் ஜமாஅத்தின் மார்க்க செயல்பாடுகளில் தடை விதிப்பதற்கு முன்பு ஜமாஅத்தின் புத்தகம் மற்றும் ஜமாஅத்தால் மொழியாக்கம் செய்யப்பட்ட குர்ஆனை மக்களுக்கு முறையாக விநியோகம் செய்து வந்தார்கள். தனது தப்லீக்கின் மூலமாக அன்னார் ஏராளமான மக்களுக்கு அஹ்மதிய்யத்தின் தூதுச் செய்தியை எட்ட வைத்தார்கள்.

மர்ஹூம் தனக்குப் பிறகு தனது ஒரு மனைவியையும், 7 வயது மகனையும் தனது நினைவாக விட்டுச் சென்றுள்ளார்கள். இவர் அன்னாருடைய இரண்டாவது மனைவி ஆவார். முதலாவது மனைவியை அன்னார் தலாக் கொடுத்திருந்தார்கள். முதல் மனைவிக்கும் பிள்ளைகள் இருக்கின்றன. அந்தப் பிள்ளைகள் அஹ்மதிகள் இல்லை. அல்லாஹ் அவர்களுக்கும் அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொள்ளும் நற்பாக்கியத்தை வழங்குவானாக. அல்லாஹ் மர்ஹூமுடன் பாவமன்னிப்புடனும், கருணையுடன் நடந்து கொள்வானாக.

முபல்லிக் சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்: ரஷ்யன் மொழியில் திருக்குர்ஆன் மொழிபெயர்ப்பு வெளியானது. அன்னார் சில தவறுகளை சுட்டிக் காட்டினார்கள். அப்போது நான் அன்னாரிடம், அவ்வாறென்றால் திருக்குர்ஆனின் மொழியாக்கத்தை முழுமையாக படியுங்கள். மேலும் முழுமையான முறையில் அதிலுள்ள தவறுகளை சுட்டிக் காட்டுங்கள் என்று கூறினேன். அன்னார் 10, 15 நாட்களிலேயே திருக்குர்ஆன் மொழியாக்கத்தை படித்தார்கள். தவறுகளை சுட்டிக் காட்டினார்கள்.

முபல்லிக் சாஹிப் அவர்கள் தொடர்ந்து எழுதுகின்றார்கள்: மர்ஹூம் தொழுகைக்காக மிகவும் ஏற்பாட்டுடன் வுளூ செய்து வந்தார். அவர் தொழுகையை நிறைவேற்றுவதைப் பார்த்து பொறாமை ஏற்பட்டு வந்தது.

மதிப்பிற்குரிய உஸ்ஜன்பவ் சாஹிப் கூறுகின்றார்கள்: உண்மை என்னவென்றால், கோனோக் நோக் சாஹிப் அவர்களே எனக்கு அஹ்மதிய்யத்தின் தூதுச் செய்தியை எட்ட வைத்தார்கள். நான் அவர்களிடம் கேள்வி கேட்கும் போதெல்லாம் ஆச்சரிப்படும் வகையில் பதிலளித்து வந்தார்கள். அன்னாரின் பதில்கள் தர்க்கம், அறிவு மற்றும் நுட்பமான ஞானத்தால் நிறைந்திருந்தது. மதிப்பிற்குரிய கோநோக் சாஹிப் உயர்ந்த நல்லொழுக்கங்களுக்கு உரிமையாளராகவும், பொறுமையாளராகவும், தைரியமிக்க மனிதராகவும் இருந்தார்கள். அன்னாரின் நல்லொழுக்கம் மற்றும் இதர சிறப்புகளின் காரணமாகவே ஜமாஅத்தில் நுழைந்தார்கள்.

நான் (ஹுஸூர்) நஃபில் நோன்பு நோற்பதற்கும், துஆக்கள் செய்வதற்கும் அறிவுறுத்தியபோது அன்னார் திங்கட்கிழமை மற்றும் வியாழக்கிழமை அன்று முறையாக நோன்பு நோற்று வந்தார்கள். வாரத்தில் ஒரு நாள் நோன்பு வையுங்கள் என்று அவரிடம் கூறப்பட்டபோது நான் திங்கட்கிழமையன்றும் நோன்பு நோற்கின்றேன். வியாழக்கிழமை அன்றும் நோன்பு நோற்கின்றேன். ஏனென்றால் நான் கிலாபஃத்தின் எல்லா அழைப்பிற்கும் கீழ்ப்படியக் கூடியவனாக ஆகிவிட வேண்டும் என்று நான் விரும்புகின்றேன் என்று அன்னார் கூறினார்கள். கிலாஃபத்தின் மீது எல்லையற்ற அன்பு கொண்டவராக இருந்தார்கள்.

குத்பா ஜுமுஆவை முறையாக ரஷ்யன் மொழியில் கேட்டு வந்தார்கள். மிகவும் பணிவுமிக்க மனிதராக இருந்தார்கள். மிக நல்லியல்பு கொண்ட மனிதராக இருந்தார்கள். நான் ஏற்கனவே கூறியதுபோன்று ஆர்வத்துடன் இறைவன் பால் மக்களை அழைத்து வந்தார்கள். அல்லாஹ் அன்னாருடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. அனைத்து மர்ஹூம்களின் அந்தஸ்தையும் உயர்த்துவானாக. அவர்களின் சந்ததிகளுக்கு மத்தியிலும் அவர்களது நன்மைகளை தொடரச் செய்வானாக. (தமிழில்: மவ்லவி அப்துர் ரஹ்மான் தாஹிர்)

......☆......☆......☆......

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தைப் பற்றி அறிந்து கொள்ள:–
www.alislam.org

எல்லாரிடத்தும் அன்பு;
எவரிடத்தும் இல்லை வெறுப்பு

# ஜுமுஆ பேருரை

**அவர் ஆன்மீக மற்றும் பௌதீக ஞானங்களால் நிரப்பப்படுவார் என்ற ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் தொடர்பான முன்னறிவிப்பின் ஓர் அம்சம் தொடர்பாக அன்னாரின் எழுத்துக்கள் மற்றும் சொற்பொழிவுகளிலிருந்து சுருக்கமான நற்குறிப்பு**

ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 19 பிப்ரவரி 2021** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1400 -ஆம் ஆண்டு **தப்லீக்** மாதம் **19 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ۔

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِينَ۔ الرَّحْمٰنِ الرَّحِيمِ۔ مٰلِكِ يَوْمِ الدِّينِ۔ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِينُ۔ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيمَ۔ صِرَاطَ الَّذِينَ أَنْعَمْتَ عَلَيْهِمْ غَيْرِ الْمَغْضُوبِ عَلَيْهِمْ وَلَا الضَّالِّينَ

اَلَّذِينَ يُنْفِقُونَ أَمْوَالَهُمْ بِاللَّيْلِ وَالنَّهَارِ سِرًّا وَّعَلَانِيَةً فَلَهُمْ أَجْرُهُمْ عِنْدَ رَبِّهِمْ وَلَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُونَ

*(சென்ற இதழின் தொடர்ச்சி...)*

எனவே ஹுஸூர் அவர்கள் சொற்பொழிவாற்றினார்கள். விலை மதிப்பற்ற அறிவுரைகள் அதில் இடம் பெற்றிருந்தன. ஆராய்ச்சியும் இருந்தது. அதனுடைய சுருக்கம் இஸ்லாத்தின் குழப்பங்களுக்கு சில பெரிய பெரிய சஹாபிகளும் காரணம் என்ற சிந்தனை முற்றிலும் தவறு என்பதாகும். ஹுஸூர் அவர்கள் தமது இந்த கட்டுரையில் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் ஆரம்ப காலத்தின் நிலைமைகளையும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பார்வையில் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுக்கு இருந்த அந்தஸ்தையும் எடுத்துரைத்தார்கள். குழப்பம் எங்கிருந்து உருவானது? இஸ்லாமிய கிலாஃபத் என்பது ஒரு மார்க்க ஏற்பாடாக இருந்தது. சஹாபிகளைப் பற்றிய தப்பெண்ணம் ஆகுமற்றது போன்ற விஷயங்களை விவாதித்தவாறு குழப்பத்தின் காரணங்களையும், ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் காலத்தில் அது ஏற்படுவதற்குரிய காரணிகளையும் அன்னார் எடுத்துரைத்துள்ளார்கள்.

குழப்பத்தின் தலைவரான மற்றும் தோற்றுனரான அப்துல்லாஹ் பின் சபாவின் நிலைமையையும், அக்காலத்தில் கூஃபா, பஸரா, சிரியா மற்றும் அங்குள்ள முஸ்லிம்களின் பொதுவான பண்புகளைப் பற்றியும் விளக்கியுள்ளார்கள். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் தமது விருப்பப்படி அந்த குழப்பங்களுக்கு காரணியாக இருக்கக்கூடிய அமீர்மார்களை நியமித்து விட்டார்கள் என்றும் அன்னார் மீது ஆட்சேபனை செய்யப்பட்டது. ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இது தொடர்பான தனது கருத்தை எடுத்துக் கூறியவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்:

எந்த மக்கள் ஆய்வுக்காக அனுப்பப்பட்டார்களோ அவர்கள் மகத்துவமிக்கவர்களாகவும், தொடர்பற்ற மக்களாகவும் இருந்தனர். அவர்களின் ஆய்வுகளின் மீது எவருக்கும் ஆட்சேபனை செய்வதற்கு வழியில்லாமல் இருந்தது. ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் பல்வேறு இடங்களுக்கு மூன்று சஹாபிகளை ஆய்வுக்காக அனுப்பி இருந்தார்கள். அவர்களும் பல்வேறு இன்னும் பல நபர்களும் நாட்டின் பல பகுதிகளுக்கு அனுப்பப்பட்டார்கள். அவர்கள் அனைவரும் நாட்டில் முழுமையாக அமைதி உள்ளது. அநீதி அக்கிரமத்திற்கான அடையாளம் கூட இல்லை. ஆட்சியார்கள் நீதியுடன் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்று முழுமையான ஒரு தீர்ப்பை வழங்கினார்கள். அதன் பிறகு எந்த சந்தேகத்திற்கும் இடமில்லாமல் போனது. இந்த அனைத்து குழப்பங்களும் சில தீய இயல்பு கொண்ட மனிதர்களின் தீங்கினால் மேலும் அப்துல்லாஹ் பின் சபாவின் பிடிவாதத்தாலும் ஏற்பட்டதாகும்.

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களும், அவர்களுடன் இருந்தவர்களும் எல்லா விதமான ஆட்சேபனைகளிலிருந்தும் தூயவர்களாக இருந்தனர். அதாவது அன்னார் சில ஆட்சியாளர்களை நியமனம் செய்திருந்தார்கள். சிலர் கவர்னர்களாக இருந்தனர். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் தனது இயல்பிற்கேற்ப மென்மை மற்றும் கருணையின் பக்கம் சாய்ந்தவராக இருந்தார்கள். குழப்பவாதிகளின் தீங்கு அதிகரித்துக் கொண்டு சென்றது. அவர்களின் குழப்பத்தின்போதும், நான் முஸ்லிம்களின் ரத்தத்தால் எனது கரத்தை நிரப்ப விரும்பவில்லை என்றே அன்னார் கூறினார்கள். பெரும் சஹாபிகள் மற்றும் முஆவியா ஆகியோர் அமைதியை நிலைநாட்டுவது பற்றி பல்வேறு ஆலோசனைகளை முன் வைத்தார்கள். ஆனால் கருணை உள்ளம் படைத்த ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் தனது வழிமுறையில் நிலை நின்றார்கள். மேலும் ஆட்சேபனையாளர்களின் வாயை அடைப்பதற்காக அன்னார் அவர்களின் சில கோரிக்கைகளை ஆய்வு செய்கின்ற அளவுக்கு ஏற்றுக் கொண்டார்கள்.

மரபுகளின் வேறுபாடுகள், வரலாற்று சூழல்களை சரியாக அறிந்து கொள்வதற்கும், புரிந்து கொள்வதற்கும் ஒரு முக்கிய விஷயத்தை அடிப்படையாக ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: அந்த காலத்து வரலாறு தொடர்பாக மிகவும் எச்சரிக்கையுடன் செயல்படுவது அவசியமாகும். ஏனென்றால் அந்த காலத்திற்கு பிறகு வேறு எந்த காத்திலும் இப்படிப்பட்ட சூழல் வரவில்லை. ஒருவர் அல்லது இருவர் மீது அனுதாபம் கொள்வதிலிருந்து விலகியிருந்த சம்பவமும் இல்லை. கடுமையான பகைமை மற்றும் கட்டாய அன்பு கலந்து விடுவதால் மரபுகள் எப்போதும் பாதுகாக்கப்பட முடியாது. சரியான வரலாற்றை கண்டறிவதற்கான அழகிய வழிமுறை இதுவாகும்.

சம்பவங்கள் எனும் உலகம் ஒரு சங்கிலித் தொடரைப் போன்றதாகும். ஒரு குறிப்பிட்ட சம்பவத்தின் தரத்தை அறிந்து கொள்வதற்கு அதன் சங்கிலித் தொடரைக் கொண்டும் கண்டறிய வேண்டும். அந்த இணைப்பு சரியாக பொருந்துகின்றதா இல்லையா என்று பார்க்க வேண்டும். ஹுஸூர் அவர்களின் ஆராய்ச்சியின் சாராம்சம் என்னவென்றால், ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) மற்றும் ஏனைய சஹாபிகளும் எல்லா வகையான குழப்பங்களிலிருந்தும் அல்லது குறைகளிலிருந்தும் தூயவர்களாக இருந்தனர். இன்னும் கூறப்போனால் அவர்களின் செயல்பாடு மிக உயர்தரமான ஒழுக்கத்தை வெளிப்படுத்தக் கூடியதாக இருந்தது. அன்னாரின் பாதங்கள் நன்மையின் உயர் தரமான அந்தஸ்தில் நிலைபெற்றிருந்தது. சஹாபிகளுக்கு ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் கிலாஃபத்தின் மீது எந்த ஆட்சேபனையும் இருந்ததில்லை. இறுதி மூச்சு வரை நன்கு விசுவாசத்துடன் செயல்பட்டு வந்தார்கள். ஹஸ்ரத் அலி (ரலி), ஹஸ்ரத் தல்ஹா (ரலி), ஹஸ்ரத் ஸுபைர் (ரலி) ஆகியோர் அவர்களுக்கு எதிராக இரகசிய திட்டம் தீட்டியதாக கூறப்படுவது முற்றிலும் தவறாகும். அன்ஸார் சகோதரர்கள் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் மீது கோபம் கொண்டிருந்தனர் என்று அவர்கள் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுகளும் தவறாகும். ஏனென்றால் அன்ஸார் சகோதர்களின் அனைத்து தலைவர்களும் இந்த குழப்பத்தை அகற்றுவதற்கு முயற்சி செய்து கொண்டிருந்தனர் என்பதை நாம் காண்கின்றோம்.

(தஆருஃப் குதுப், அன்வாருல் உலூம் தொகுதி 4 பக்கம் 11–13)

இதைப் பற்றி சில அந்நியர்களும் தாக்கங்களை வெளிப்படுத்தியுள்ளனர். அதற்கு முதலாவது சாட்சி செய்யது அப்துல் காதிர் சாஹிப் M.A லாஹூர் இஸ்லாமிய கல்லூரியின் பேராசிரியர் முதல் வெளியீட்டில் முன்னுரை எழுதியுள்ளார்கள். அறிஞரான தந்தைக்கு அறிஞரான மகன். இந்த சொற்பொழிவு மிகவும் அறிவுப் பூர்வமானதாக இருந்தது என்பதற்கு ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூத் அஹ்மது

EDITOR
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
SUB EDITOR
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly BADAR Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 6 Thursday 22 April 2021 Issue No. 16

MANAGER
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.500/- (Per Issue Rs. 9/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

அவர்கள் பங்கு பெற்றதே சாட்சியாக இருக்கிறது. மனித வரலாற்றை பற்றி எனக்கும் அதிகம் தெரியதாது. நான் ஒரு பெரும் வாதத்துடன் கூறுகின்றேன். முஸ்லிம்கள் என்ன? முஸ்லிம் அல்லாதவர்கள் என்ன? மிகக் குறைவான வரலாற்று ஆசிரியர்களே ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகளின் ஆழத்தை சென்றடைந்துள்னர். மேலும் அந்த அபாயகரமான போர் நடவடிக்கைகளுக்கு அசல் காரணிகளை புரிந்து கொள்வதில் வெற்றி அடைந்துள்ளனர். போருக்கான காரணிகளை புரிந்து கொள்வதில் ஹஸ்ரத் மிர்ஸா சாஹிப் அவர்களுக்கு வெற்றி கிடைத்துள்ளது.

இன்னும் கூறப்போனால், அன்னார் மிகவும் தெளிவான வடிவில் இந்த சம்பவங்களை எடுத்துரைத்து விட்டார்கள். எந்த காரணங்களால் கிலாஃபத் கட்டிடம் ஒரு நீண்ட காலம் வரை ஆட்டத்தில் இருந்ததோ அதை விவரித்து விட்டார்கள். என்னைப் பொருத்தவரை இதுபோன்ற ஆதாரமிக்க கட்டுரைகள் இஸ்லாமிய வரலாற்றில் ஆர்வம் படைத்தவர்களின் பார்வையில் இதற்கு முன்பு ஒருபோதும் வந்திருக்காது. உண்மை என்னவென்றால், ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலகட்டம் பற்றி எந்த அளவிற்கு அசல் இஸ்லாமிய வரலாற்றை படிப்போமோ அதே அளவிற்கு படிப்பினை பெறக்கூடிய விலைமதிக்கக்கூடிய கட்டுரைகளும் தெரிய வரும்.

(இஸ்லாம் மே இக்திலாஃபாத் கா ஆகாஸ் பக்கம் 2 – 1937 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் அச்சிடப்பட்டது)

அடுத்து அன்னாருடைய மற்றொரு சொற்பொழிவு உள்ளது. தக்தீரே இலாஹி இறை நியதி என்ற சொற்பொழிவாகும். அன்னார் ஆண்டு மாநாட்டில் காதியானிலுள்ள மஸ்ஜித் நூரில் சொற்பொழிவாற்றினார்கள். அதன் சுருக்கம் இதுவாகும். அன்னார் 1919 ஆம் ஆண்டு ஜல்ஸாவில் சொற்பொழிவாற்றினார்கள். இறை நியதி என்ற விவகாரம் எப்படிப்பட்டது என்றால் மிகவும் கடினமானதும், ஆழமானதும் ஆகும். அந்த தலைப்பில் அன்னார் மிகவும் ஆழமிக்க சொற்பொழிவை ஆற்றினார்கள்.

அன்னார் கூறுகின்றார்கள்: நான் இறைவனிடம் மிகவும் தாழ்மையுடன், இறைவா! இந்த தலைப்பில் உரையாற்றுவது உகந்ததல்ல என்றால் அதில் உரையாற்றக்கூடாது என்ற எண்ணத்தை எனது உள்ளத்தில் போட்டு விடுவாயாக என்று கூறினேன். ஆனால் உரையாற்ற வேண்டும் என்ற தூண்டுதலே எனது உள்ளத்தில் ஏற்பட்டது. அது கடினமான கட்டுரை தான். அதனைப் புரிந்து கொள்வதற்கு மிகுந்த உழைப்பும் முயற்சியும் அவசியமாகும். ஆனால் நீங்கள் அதனை புரிந்து கொண்டால் சிறந்த நன்மை ஏற்படும்.

ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள் இந்த சொற்பொழிவை பல்வேறு அம்சங்களின் அடிப்படையில் எடுத்துரைத்தவாறு இவ்வாறு கூறியிருந்தார்கள்: கல்வி பயின்றவர்களும், கல்வி பயிலாதவர்களும், புத்திக்கூர்மை உடையவர்களும், புத்திக்கூர்மை இல்லாதவர்களும் அனைத்து தரப்பட்ட மக்களும் ஒன்றிணைந்திருக்கும் ஒரு சபையில் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் இந்த கட்டுரையில் உரையாற்றியது என்பது நிச்சயமாக ஒரு சாதாரண விஷயமல்ல. அன்னார் எவ்வளவு அழகிய முறையில் இந்த கட்டுரையை எடுத்துரைத்தார்கள் என்றால் சந்தேகத்திற்கிடமின்றி அன்னாருக்கே அந்த உரிமை இருந்தது.

ஹஸ்ரத் நான்காவது கலீஃபா (ரஹி) அவர்கள் கூறுகின்றார்கள்: இது தக்ரீர் அல்ல. மாறாக, ஞானத்தின் கூற்றுகளின் ஓர் அணை ஆகும். இறை நியதியின் முக்கியத்துவத்தையும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வழிகாட்டுதல்களையும் எடுத்துரைத்த பிறகு அன்னார் இந்த தலைப்பில் தனது கருத்தை வெளிப்படுத்தியுள்ளார்கள். இறை நியதியின் மீது நம்பிக்கையும், இறை இருப்பின் மீது நம்பிக்கையும் ஒன்றை ஒன்று பின்னிப் பிணைந்த விஷயங்கள் ஆகும். அதன் பிறகு அன்னார் இறை நியதி தொடர்பான சர்ச்சைக்குரிய கருத்துக்களை விவாதித்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சில வழிகாட்டுதல்களை ஒப்பீடு செய்துள்ளார்கள். அதன் பிறகு இறை நியதியை புரியாததன் விளைவாக மனிதனுக்கு பெரும் பெரும் தடுமாற்றங்கள் ஏற்பட்டுள்ளது என்றும் அன்னார் குறிப்பிட்டுள்ளார்கள்.

தொடர்ந்து அன்னார் கூறியுள்ளார்கள்: வஹ்தத்துல் வஜூத் என்ற கொள்கையிலுள்ள தவறுகளையும் அன்னார் வெளிப்படுத்தியுள்ளார்கள். திருக்குர்ஆனிலிருந்து ஆறு வசனங்களை எடுத்து வைத்து மிகவும் நுட்பமான மற்றும் வலுவான ஆதாரங்களை முன் வைத்து அந்த கொள்கையை ரத்து செய்துள்ளார்கள். அதன் பிறகு அதன் மற்றொரு உச்சத்தையும் தவறு என நிரூபணம் செய்து விட்டார்கள். மேலும் இறைவனால் ஒன்றுமே செய்ய முடியாது. என்ன நடக்குமோ அது திட்டத்தால் மட்டுமே நடக்கும் என்ற எண்ணத்தையும் வலுவான சான்றுகளால் அன்னார் ரத்து செய்து விட்டார்கள். இறைஞானம் மற்றும் இறை நியதியை ஒன்றோடு ஒன்று கலந்து விடுவதன் மூலமாக மனித சிந்தனைகள் பெரும் தவறிழைத்து விட்டன. அதனை மிக அழகிய முறையில் ஒப்பீடு செய்து இந்த விவகாரத்தை மிகவும் அழகிய முறையில் கட்டமைத்துள்ளார்கள்.

தொடர்ந்து ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: இறை நியதி என்ற விவகாரத்தில் எல்லா அம்சங்களைப் பற்றியும் இந்த சொற்பொழிவு விவாதித்துள்ளது. பல்வேறு தரப்பட்ட பழைய மற்றும் புதிய ஆட்சேபனைகளுக்கும் இதில் பதில்கள் வழங்கப்பட்டுள்ளன. இறை நியதி தொடர்பான குறிப்பில் அன்னார் 7 ஆன்மீக அந்தஸ்துகளையும் குறிப்பிட்டுள்ளார்கள். அவை இறை நியதி என்ற விவகாரத்தின் பொருளை சரியாக புரிந்து அதன் தேட்டங்களை முழுமை செய்வதன் விளைவாக மனிதனுக்கு கிடைக்க முடியும்.

(தஆருஃப் குதுப், அன்வாருல் உலூம் தொகுதி 4 பக்கம் 20,21)

எவ்வாறிருப்பினும் இது படிக்க வேண்டிய புத்தகமாகும். இறை நியதி தொடர்பாக கேள்வி கேட்டுக் கொண்டிருக்கக்கூடிய மக்கள் இதை கண்டிப்பாக படிக்க வேண்டும்.

அடுத்து முஸ்லிம்களின் வழிகாட்டுதல்களுக்காக ஒரு சந்தர்ப்பத்தில் அன்னார் ஆற்றிய சொற்பொழிவாகும். துருக்கி உடன்படிக்கை மற்றும் முஸ்லிம்களின் எதிர்கால நடவடிக்கை என்ற தலைப்பில் அன்னார் அறிவுரை வழங்கியுள்ளார்கள். இந்த தலைப்பில் அலகாபாத்தில் கிலாஃபத் கமிட்டியின் ஏற்பாட்டின் கீழ் ஒரு மாநாடு நடந்தது. அதில் கூறப்பட்ட விஷயத்தின் சுருக்கம் இதுவாகும். முதலாம் உலகப் போருக்குப் பிறகு வெற்றி பெற்ற நாடுகளின் கூட்டமைப்பினர் உஸ்மானிய செல்வத்துடன் சமாதானத்திற்காக வகுத்த நிபந்தனைகள் மிகவும் இழிவுற்குரியதாக இருந்தது. அந்த அடிப்படையில் துருக்கி அரசாங்கத்தின் பகுதி வெளியேற்றப்பட்டது.

இந்த கடற்படை, தரைப்படை ஆகியவை எல்லைக்குட்பட்டதாக ஆக்கப்பட்டது. அதனால் வேறு சில கடுமையான நிபந்தனைகளும் விதிக்கப்பட்டன. அந்த நிலைமைகளில் துருக்கி அரசாங்கத்துடன் சமாதானத்திற்கான உடன்படிக்கையுடன் விவகாரத்தை சீர்தூக்கிப் பார்த்து முஸ்லிம்களுக்கு அடுத்த கட்ட நடவடிக்கையை சிந்திப்பதற்கும் ஆலோசிப்பதற்கும் 2 ஜூன் 1920 ஆம் ஆண்டு அலகாபாதில் கிலாஃபத் கமிட்டியின் கீழ் ஒரு மாநாடு நடத்த தீர்மானிக்கப்பட்டது.

(தொடரும் – இன்ஷா அல்லாஹ்)

(தமிழில்: மவ்லவி அப்துர் ரஹ்மான் தாஹிர்)

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad